بسم الله الرحمن الرحيم

شہوت کیسے کنٹرول کریں (ٹمل)

# இச்சைக்கு இசையாதே!...

உருது மூலம்:-

**மௌலானா பீர் துல்.:.பிகார் அஹ்மத் நக்ஷ்பந்தீ, முஜத்தீதி [ரஹ்]**

حضرت مولانا پیر ذوالفقار احمد نقشبندی مجددی رحمۃ اللہ علیہ

தமிழில்:-

**மௌலவி ரியாஜுத்தீன் ஹஸனீ**

**தாருல் இஸ்லாஹ்**

(சமூக சீர்திருத்தப் பாசறை)

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | இச்சைக்கு இசையாதே!... |
| ஆசிரியர் பெயர் | : | மௌலானா மௌலவி ரியாஜுத்தீன் ஹஸனீ |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| பக்கம் | : | 69 |
| விலை | : | ரூ.35.00 |
| இரண்டாம் பதிப்பு | : | ஜூன் - 2026<br>முஹர்ரம் - 1448 |
| தட்டச்சு | : | மௌலானா, அப்துல் காதிர் ஹஸனீ, PH. 6385575974 |
| வெளியீட்டு எண் | : | 8 |

**நூல் கிடைக்குமிடம் :**

சமூக சீர்திருத்தப் பாசறை

(தாருல் இஸ்லாஹ்) பள்ளபட்டி.

செல் : 89256 11688

# பொருளடக்கம்

1. மதிப்புரை!....................................................................5

2. வாழ்த்துரை!..................................................................8

3. இச்சைக்கு இசையாதே!..................................................10

4. இச்சையைக் கட்டுப்படுத்த இறைவன் கூறும் மருந்து...........10

5. இச்சையைத் தணிக்க இறைவேதம் கூறும் சிகிச்சை............18

6. தீய பார்வையைத் தவிர்ப்பது............................................20

7. ஒழுக்கக்கேடர்களுடன் உறவாடாமல் தவிர்ப்பது................20

8. தொழுகையின் மூலம் உதவி தேடுதல்..............................21

9. அதிகமாக திக்ரு செய்தல்.................................................22

10. இச்சைகளைக் கட்டுப்படுத்த நபி ﷺ அவர்கள் பரிந்துரைத்த சில சிகிச்சைகள்..........................................................24

11. நோன்பு நோற்றல்..........................................................25

12. ஒழுவுடனே இருத்தல்.....................................................25

13. துஆ கேட்பது................................................................26

14. இச்சையை அடக்க எளியவனின் அனுபவ சிகிச்சை...........30

15. சும்மா இருக்காதே.........................................................30

16. தனியாக இருக்காதே......................................................33

17. தூக்கம் வராமல் படுக்கைக்குச் செல்வதைத் தவிர்க்கவும்.....36

18. இருட்டில் தூங்குவதற்குப் பதிலாக வெளிச்சத்தில் தூங்கப் பழக்கப்படுத்துங்கள்........................................................36

19. கழிப்பறையில் அதிக நேரம் கழிக்க வேண்டாம்......................37

20. ஆபாச நகைச்சுவையிலிருந்து விலகியிருத்தல்.....................39

21. தீய பார்வை ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்களைத் தவிர்ந்து கொள்க...............................................................................42

22. மண்ணறைக்குச் செல்லுங்கள்..........................................43

23. எரியும் நெருப்பு ஜுவாலையைப் பார்த்து படிப்பினை பெறுதல்.....44

24. எழுப்பப்படும் நாளில் ஏற்படும் அவமானங்கள்..................48

25. அல்லாஹ் என்னுடன் இருக்கின்றான் என்று கவனத்தில் கொண்டு வருதல்........................................................50

26. சூழலை மாற்றவும்........................................................52

27. மறைமுகமான நோய்கள்..................................................53

28. விபச்சாரம் ஒரு அடியான் மீது கடனாக கருதப்படும்.........54

29. விபச்சாரம் செய்பவன் சைத்தானின் நண்பன்..................55

30. உங்கள் ஒதுக்கீடு முடிவடைந்து விடும்..........................56

31. இச்சையைக் கட்டுப்படுத்த மருத்துவ சிகிச்சை..............59

32. இச்சையை கட்டுப்படுத்துவது தொடர்பான வினாத்தாள்.....67

# மதிப்புரை!

அல்லாஹுத்தஆலா மனிதனை மிக செம்மையாக படைத்து அவனுடைய உலக வாழ்வு சீராக நகர்வதற்காக அவனுக்குள் பலவிதமான ஆசைகளை வைத்திருக்கிறான். அல்லாஹ் வழங்கிய ஆசைகள் அனைத்தும் இந்த உலக வாழ்வு சீரும் சிறப்புமாக நகர்வதற்குக் கட்டாயத் தேவையாக இருக்கிறது.

மனிதனுடைய உள்ளத்திற்குள் ஆசைகள் மட்டும் வைக்கப்படவில்லையானால் அவனுடைய உலக வாழ்க்கை ஸ்தம்பித்து விடும். உதாரணமாக உணவுக்கான தேடல் இல்லாத போது சம்பாதிப்பதை ஒருவன் எப்படி விரும்புவான்?. பெண்களின் பக்கம் நாட்டமில்லாத போது எப்படி ஒருவன் திருமணத்தைத் தேர்ந்தெடுப்பான்.

பிறகு அடுத்த சந்ததிகள் எப்படி உருவாகும்? இதுபோன்ற எண்ணிலடங்காத நோக்கங்களை முன்வைத்தே அல்லாஹ் மனிதனுக்குள் ஆசை என்ற ஒன்றை ஏற்படுத்தி இருக்கிறான். ஆனால் அந்த ஆசைகள் ஒரு எல்லைக்குட்பட்டவையாக இருந்தால் அது வரவேற்கத்தக்கதும், எண்ணிலடங்கா பலாபலன்களை கொண்டதாகவும் அமையும்.

ஆசைகள் எப்போது எல்லை தாண்டி விடுமோ அவற்றுக்கு கடிவாளமிடுதல் கட்டாயமாகிவிடும். அப்படி எல்லை தாண்டிய ஆசைகள் மூலமாக ஏற்படக்கூடிய விளைவுகளிலிருந்து ஒரு முஸ்லிம் தன்னை தற்காத்துக் கொள்வது எப்படி? அந்த ஆசைகளை மார்க்கம் அனுமதித்த வழிகளில் மடை மாற்றம் செய்வது எப்படி ?

இதைப்பற்றி தனக்கே உரிய அனுபவத்தில் மௌலானா ஜுல்பிகார் நக்ஷபந்தி ﵀ மிக அற்புதமான தீர்வுகளை சொல்லியுள்ளார்கள். ஒரு உரையில் மிக அழகாக அவற்றை விளக்கி உள்ளார்கள்.

வாலிபர்கள் தறிகெட்டிருக்கக்கூடிய இக்காலத்தில் இந்தபுத்தகம் அவர்களுடைய உள்ளங்களை தூய்மைப் படுத்துவதற்கும், அவர்களுடைய ஆசையை மட்டப் படுத்துவதற்கும் ஒரு அழகான வழிகாட்டியாக இருக்கும் என்று நம்புகிறோம்.

அந்த அடிப்படையில் தமிழ் கூறும் சமூகத்திற்கு இது போன்ற மகான்கள் உடைய அற்புதமான ஆலோசனைகள் மிக பயனுள்ளதாக இருக்கும் என்ற அடிப்படையில் இப்புத்தகம் தங்களுக்கு முன் மொழியாக்கம் செய்து சமர்ப்பிக்கப்படுகிறது.

அல்லாஹ் இப்புத்தகத்தை படிக்கக்கூடிய ஒவ்வொரு வாலிபரையும் பரிசுத்தமான, பத்தினித்தனமான வாழ்க்கை வாழ வாய்ப்பளிப்பானாக. இந்த புத்தகத்தின் மூலமாக லட்சோப லட்சம் மக்களுக்கு அல்லாஹ் நேர்வழிக்கு வழி காட்டுவானாக. ஆமீன்.

இப்படிக்கு:

மௌலானா மௌலவி

**முஃப்தி ஷகீல் அஹ்மத் நக்ஷபந்தி**

துணை முதல்வர்

மத்ரஸா பாக்கியாத்துஸ் ஸாலிஹாத்,

வேலூர். செல்;9444453232

# دعائیہ کلمات بابرکات

## محبوب العلماء والصلحاء حضرت اقدس مولانا حافظ پیر ذوالفقار احمد صاحب نقشبندی مجددی مدظلہ العالی دامت برکاتہم

اللہ رب العزت کی سنت ہے کہ انبیاء کرام علیہم الصلوۃ والسلام کو اپنی قوم کی زبان میں مبعوث فرماتے ہیں۔ چنانچہ ارشاد باری تعالی ہے۔ ''وَمَآ أَرۡسَلۡنَا مِن رَّسُولٍ إِلَّا بِلِسَانِ قَوۡمِهِۦ''(اور ہم نے ہر رسول کو ان کی قوم کی زبان ہی میں مبعوث کیا ہے)

اس زمانے میں علاقائی زبان میں اصلاح وارشاد تصوف وسلوک نیز دین کے تمام ہی شعبوں کا لسانی وقلمی کام جلد اثر انداز اور قبولیت عامہ کا ذریعہ ہے۔

تمل زبان بہت قدیم زبان ہے، اس زبان کے بولنے والے دنیا کے مختلف ممالک میں کثیر تعداد میں آباد ہیں، تصوف کے علوم تقریبا یا تو عربی میں ہیں یا فارسی اور اردو زبان میں۔ موجودہ دور میں سلسلۂ عالیہ نقشبندیہ سے اللہ رب العزت نے سارے عالم میں خوب فیض جاری فرمایا ہے۔

نہ صرف تمل علاقے کے لیے بلکہ اس زبان کے بولنے والے سب ہی بندگان خدا کے حق میں خواہ وہ دنیا کے جس خطے میں ہوں یہ بڑی نعمت ہے کہ عزیز گرامی قدر مولانا مفتی شکیل احمد صاحب نقشبندی مجددی سلمہ زید مجدہ اپنی مجالس میں اس فقیر کے طویل خطبات سے اہم اہم مضامین ونکات کا انتخاب کرتے ہیں اور انہیں بزبان تمل ترجمہ کر کے مختصر ومفید اور جامع انداز میں رسائل کی شکل میں طبع کروا کر ہزاروں کی تعداد میں عام کرتے ہیں، رمضان المبارک میں دوران اعتکاف ان مرتب شدہ رسائل کی مستقل تعلیم ہوتی ہے، الحمدللہ ہزاروں کا مجمع ان رسائل سے استفادہ کر رہا ہے۔

اللہ رب العزت سے دعا ہے کہ عزیز موصوف کی اس محنت کو شرف قبولیت بخشے اور دارین میں نفع ونجات کا ذریعہ بنائے۔ آمین

فقیر ذوالفقار احمد نقشبندی مجددی رحمتہ اللہ علیہ

کان اللہ لہ عوضًا عن کل شیءٍ

## வாழ்த்துரை!

மஹ்பூபுல் உலமா வஸ்ஸுலஹா ஹஜ்ரத் அக்தஸ் மௌலானா ஹாபிழ் ஃபீர் ஜுல்ஃபிகார் அஹ்மத் ஸாப் நக்ஷ்பந்தி, முஜத்திதீ ﵀ அவர்களின் பரக்கத் பொருந்திய துஆவின் வார்த்தைகள்.

நபிமார்களை அவர்களின் சமூக மக்கள் என்ன மொழி பேசுகிறார்களோ அதே மொழியைப் பேசுபவர்களாக அனுப்புவது அல்லாஹ்வுடைய சுன்னத்தாகும். இதையே எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்:

وَمَا أَرْسَلْنَا مِنْ رَّسُولٍ إِلَّا بِلِسَانِ قَوْمِهِ

**“மேலும் நாம் ஒவ்வொரு தூதரையும் அவர்களுடைய சமூகத்தாரின் மொழியைப் பேசக்கூடியவர்களாக அனுப்பியுள்ளோம்.”**

தற்காலத்தில் சீர்திருத்தம் மற்றும் வழிகாட்டுதல், சூஃபித்துவம் மற்றும் சுலூக் உடைய உபதேசங்கள், அதே போல் மார்க்கத்தின் அனைத்து துறைகளிலும் பேச்சு மற்றும் எழுத்தின் மூலமாக நடைபெறும் சேவைகள் அனைத்தும் அவரவர்களுடைய பிராந்திய மொழியில் இருந்தாலே விரைவான தாக்கத்தையும், பொது அங்கீகாரத்தையும் பெறக் கூடியதாக இருக்கும்.

அவ்வகையில் தமிழ் மொழி என்பது மிகத் தொன்மையான மொழியாகும். அதைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளவர்கள் உலகம் முழுவதும் அதிக எண்ணிக்கையில் பரவியுள்ளனர்.

சூஃபித்துவ ஞானங்கள் அனைத்தும் கிட்டத்தட்ட அரபு, பாரசீகம் மற்றும் உருது மொழிகளில் மட்டுமே உள்ளன.

தற்போதைய சுழலில், அல்லாஹ் நக்ஷ்பந்தி தரீக்காவின் மூலம் முழு உலகிலும் சீர்திருத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறான். தமிழ்நாட்டிலுள்ளவர்களுக்கு மட்டுமல்லாமல் இந்த மொழியைப் பேசக்கூடிய அல்லாஹ்வின் அடியார்கள் உலகின் எந்தப் பகுதியில் இருந்தாலும் சரி அவர்களுக்கும் இந்த செயல் மிகப் பயனுள்ளதாகும்.

நமது அன்பான மௌலானா முஃப்தி ஷகீல் அகமது சாஹிப் நக்ஷ்பந்தி முஜத்திதீ அவர்கள் இந்த ஃபக்கீருடைய பல உபதேசங்களிலிருந்து முக்கியமான பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றை தமிழில் மொழிபெயர்த்து, குறுகிய, பயனுள்ள துண்டுப்பிரசுரங்களாகவும் மற்றும் சிறு தொகுப்புகளாகவும் அச்சிட்டு ஆயிரக்கணக்கானோருக்கு விநியோகிப்பது ஒரு பெரிய பாக்கியமான காரியமாகும்.

மேலும் புனித ரமலான் மாதத்தில், இந்தத் தொகுப்புகள் தொடர்ந்து படிக்கப்பட்டு வருலதும் மிக மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். அல்ஹம்துலில்லாஹ், ஆயிரக்கணக்கான மக்கள் இதனால் பயனடைகிறார்கள்.

ஹஜ்ரத் அவர்களின் இந்த முயற்சி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று நான் அல்லாஹ்விடம் விஷேசமாக துஆ செய்கிறேன். அல்லாஹ் அவர்களை மன்னித்து, அவர்களுக்கு நன்மை மற்றும் மன்னிப்பற்குக் காரணமாக இதை ஆக்குவானாக.! ஆமீன்.

**பீர் துல்ஃபிகார் அஹ்மத் நக்ஷபந்தீ, முஜத்தீதி [ரஹ்]**

# இச்சைக்கு இசையாதே!...

அல்லாஹ் மனித உடலைப் படைத்ததுடன் அதன் பராமரிப்பிற்கான உந்துதல்களை இயல்பிலேயே அமைத்துள்ளான். உதாரணமாக, ஒரு நபருக்கு உணவு சாப்பிட்ட சில மணி நேர இடைவெளிக்குப் பிறகு தானாக பசி எடுக்க ஆரம்பிக்கும். உடனே அவர் உணவுக்கான ஏற்பாடுகளைச் செய்வார். அவ்வாறே தாகத்தை உணரும் போது, தண்ணீர் குடிக்க முயல்வார். தொடர் வேலை செய்து சோர்வை உணரும் போது, தூங்குவதற்காக கட்டில் மெத்தையைத் தேடுவார்.

அவ்வாறே மலம், ஜலம் கழிக்கும் தேவை ஏற்படும் போது உடனடியாக கழிப்பறைக்குச் சென்று தன்னுடைய இந்த அத்தியாவசியத் தேவையைப் பூர்த்தி செய்வதன் மூலம் ஒருவிதமான நிம்மதியைப் பெறுவார். இவையனைத்தும் அனைவருக்கும் ஏற்படக்கூடிய இயற்கைத் தேவைகளாகும். ஒரு நபர் இவற்றை சிறிது காலம் வரை கட்டுப்படுத்தலாம். ஆனால் இவற்றை நிறைவேற்றாமல் ஒருபோதும் அவருக்கு நிம்மதி ஏற்படாது. அவ்வாறே, ஒருவர் வயது வந்தவராகும் போது, தனக்குள் ஒரு விதமான பாலியல் தூண்டுதலை உணர்வார். அதை அவரால் சில காலம் வரை அடக்க முடியும். ஆனால் அவற்றை நிறைவேற்றாமல் அவரால் முழு அமைதி காண முடியாது.

## இச்சையைக் கட்டுப்படுத்த இறைவன் கூறும் மருந்து

ஆண்கள் மற்றும் பெண்களின் காம இச்சையைப் போக்கும் மருந்தாக அல்லாஹ் திருமணத்தை வைத்துள்ளான்.

فَانْكِحُوْا مَا طَابَ لَكُمْ مِنَ النِّسَاءِ

**உங்களுக்குப் பிடித்த பெண்களை மணந்து கொள்ளுங்கள் என்று அல்லாஹ் கூறுகிறான்.**

திருமணத்தின் மூலம், ஒரு ஆணும் பெண்ணும் ஒன்றிணைந்து தங்களுடைய காம வேட்கையை தணிப்பதற்கு சிறந்த வழிமுறையை செயல்படுத்துகின்றனர். ஒரு நபருக்கு காமப் பசி ஏற்படும் போது இயல்பாக ஒரு விசித்திரமான குழப்ப நிலை அவனுக்குள் நிலவும். இப்படிப்பட்ட நிலையில், அவருக்கு வணக்கங்களில் மனம் லைக்காது. வேறு எந்த வேலையையும் திருப்திகரமாக செய்ய இயலாது. அவருடைய அறிவையும், மனதையும் ஒருவிதமான போதை பிடித்துக் கொண்டு, தவறான ஏதோ ஒன்றை செய்து தன்னுடைய இச்சையைத் தணித்துக் கொள்ள வேண்டும், இதைத் தவிர்த்து வேறு வழியே இல்லை என்ற நிலைக்கு அவனைத் தள்ளிவிடும்.

இது போன்ற இக்கட்டான சந்தர்ப்பங்களில் தான் கணவன் மனைவி ஒருவருக்கொருவர் இணைவதின் மூலம் அந்த பித்து நிலையை நீக்கிக் கொள்கின்றனர். இதன் பிறகு அவர்களுடைய மனதில் ஒரு வகையான சாந்த நிலை உருவாகும். எல்லா வகையான மன அழுத்தங்களும் மறைந்துவிடும். அவர் தனக்குள் இனம்புரியாத ஒரு வித நெகிழ்ச்சியையும், சுய மதிப்பையும் உணர்வார்.

அதனால்தான் ஆண்களும் பெண்களும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் அல்லாஹ் வழங்கிய பரிசுப் பொருளாகவும், ஒருவருக்கொருவர் இறை வெகுமதிகளாகவும் இருக்கிறார்கள் என்று அல்லாஹ் திருமறையில் கூறியுள்ளான்.

وَ مِنْ آيَاتِهِ اِنَّ خَلَقَ لَكُمْ مِنْ اَنْفُسِكُمْ اَزْوَاجًا لِتَسْكُنُوْا اِلَيْهَا

**மேலும், நீங்கள் அவர்களிடமிருந்து நிம்மதி பெறுவதற்காக, உங்களிலிருந்தே உங்கள் துணையை படைத்திருப்பது அவனுடைய மாபெரும் அத்தாட்சிகளில் ஒன்றாகும்.**

இந்தத் திருவசனம் ஆணும் பெண்ணும் ஒருவருக் கொருவர் இறைவனின் சிறந்த அத்தாட்சிகள் என்பதையும், அவர்கள் ஒருவருக்கொருவர் ஒன்று சேர்ந்தாலே அமைதியைக் காண்பார்கள் என்பதையும் தெளிவு படுத்தியுள்ளது.

இஸ்லாம் இயற்கையான மார்க்கம் என்பதால், அது துறவறத்தைக் கட்டாயப்படுத்தவில்லை. மேலும் பௌத்த மதத்தைப் போல ஒருவர் காலம் முழுக்க திருமணம் செய்து கொள்ளாமல் பிரம்மச்சாரியாக வாழ்வைக் கழிக்க அனுமதிக்கவில்லை. திருமணம் என்பது ஒரு போதும் மெய்ஞான வழியில் குறுக்கிடக்கிடாது என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளது.

மாறாக அல்லாஹ்

وَ لَقَدْ اَرْسَلْنَا رُسُلًا مِنْ قَبْلِكَ وَ جَعَلْنَا لَهُمْ اَزْوَاجًا وَّ ذُرِّيَةً

**மேலும், நிச்சயமாக, நாம் உங்களுக்கு முன் தூதர்களை அனுப்பினோம், அவர்களுக்கு மனைவிகளையும், குழந்தைகளையும் ஆக்கினோம் என்று கூறுகிறான்.**

நபி ﷺ அவர்கள் தமது சமூகத்தினரை திருமணம் செய்து கொள்ளும்படி கட்டளையிட்டு, அதை மார்க்கத்தின் ஒரு பாதியாகவும் ஆக்கினார்கள்.

إِذَا تَزَوَّجُ الْعَبْدُ فَقَدْ اِسْتَكْمَلَ نِصْفَ الدِّيْنِ

மிஷ்காத் ஷரீஃபுடைய ஒரு ஹதீஸில் திருமணம் செய்து கொள்ளும் ஒருவர் தனது தீனில் பாதியை பூர்த்தி செய்துவிட்டார் என்று வந்துள்ளது.

ஆக கற்பு மற்றும் தூய்மையான வாழ்க்கையை வாழ்வதற்கு திருமணம் செய்து கொள்ளவது தான் சிறந்த தீர்வு என்பதை அறிய முடிகிறது.

مَنْ اَرَادَ اَنْ يَلْقَي اللّٰهُ اِلَيْهِ طَاهِرًا مُّطَهَّرًا فَلْيَتَزَوَّجِ الْحَرَائِرَ

**அல்லாஹ்வைத் தூயவனாகச் சந்திக்க விரும்புபவர் கற்புள்ள, கண்ணியமான பெண்களை மணக்கட்டும் என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள்.**

திருமணம் செய்து கொள்வது காமத்திலிருந்து ஒருவரை விடுவிப்பது மட்டுமல்லாமல், அவர் இன்னபிற பெரும் பாவங்களை விட்டும் விலகுவதற்கும் வழிகோலுகிறது என்று அறிய முடிகிறது. பாவங்களை விட்டு முழுமையாகத் தவிர்ந்திருப்பதற்கு காரணங்களின் அடிப்படையில் திருமணம் கட்டாயமானதாகும். திருமணம் செய்து கொள்ளாதவர் பாலியல் ரீதியிலான பாவங்களிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள எவ்வளவு முயற்சித்தாலும், அவர் தனது மனதையும், சிந்தனையையும் பாலியல் சார்ந்த எண்ணங்கள் தோன்றுவதிலிருந்து முழுமையாக பாதுகாக்க முடியாது என்பது அனுபவப்பூர்வமான உண்மையாகும்.

எனவே, அவ்வாறான நபருக்கு எந்நேரமும் பாவத்தில் சிக்கிக் கொள்ளும் அபாயம் உள்ளது. திருமணத்திற்குப் பிறகு இந்த ஆபத்து மறைந்துவிடாது, என்றாலும் கூட அது நிச்சயமாகக் குறைந்துவிடுகிறது. வேறு

வார்த்தைகளில் கூறுவதானால், திருமணத்திற்குப் பிறகு ஒருவருக்கு தன்னுடைய காமத்தை கட்டுப்படுத்துவது எளிதாகிவிடுகிறது.

அதாவது, சட்டபூர்வமான வழியில் தனது விருப்பங்களை பூர்த்தி செய்வதன் மூலம் தடைசெய்யப்பட்டதை விட்டும் விலகி இருப்பது இலேசாகிவிடுகிறது.

وَ يَتَزَوَّجُ لِكَسْرِ الشَّهْوَةِ وَ اِعِفَافِ النَّفْسِ وَ تَكْثِيْرِ النَّسْلِ

திருமணம் என்பது காமத்தை தணிக்கவும், ஆன்மாவை பரிசுத்தமாக வைத்திருக்கவும், மனித இனத்தை அபிவிருத்தி செய்யவும் ஒரு வழியாகும் என்று ஹாஃபிழ் இப்னு ஹஜர் ﷺ ஃபத்ஹுல் பாரியில் எழுதியுள்ளார்கள்.

சில ஹதீஸ்களில் நபி ﷺ அவர்கள் தகுந்த காரணமின்றி திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பவர்கள் மீது தனது அதிருப்தியை வெளிப்படுத்தியதாக வந்துள்ளது. (புகாரி)

اَتَزَوَّجُ فَمَنْ رَغِبَ عَنْ سُنَّتِيْ فَلَيْسَ مِنِّيْ

நான் திருமணம் முடித்துள்ளேன். என் நடைமுறைக்கு யார் மாற்றம் செய்வாறோ அவர் என்னைச் சார்ந்தவர் அல்ல என்று நபி ﷺ அவர்கள் கூறியதாக வந்துள்ளது.

என்னைச் சார்ந்தவரல்ல என்றால் அவருக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை, மேலும் அவர் என் உம்மத்தைச் சேர்ந்தவர் அல்ல என்று அர்த்தமாகும். ஒரு நபர் தன்னுடைய கோபத்தை வெளிப்படுத்த இதை விடக் கடுமையான வார்த்தை வேறில்லை.

ஹஜ்ரத் அபூதர் ؓ அறிவிக்கிறார்கள்: ஒரு நாள், அக்காஃப் பின் பிஷ்ர் தமீமி ؓ அவர்கள் நபி ﷺ அவர்களிடம்

வந்தார். நபி ﷺ அவர்கள், அக்காஃப் உங்களுக்கு மனைவி இருக்கிறாரா? என்று கேட்டார்கள். அவர் இல்லை என்றார். பின்னர் நபி ﷺ அவர்கள், உங்களுக்கு அடிமை இருக்கிறாரா? என்று கேட்டார்கள். அவர் இல்லை என்றார். அதற்கு நபி ﷺ அவர்கள்,

اِذَا اَنْتَ مِنْ اِخْوَانِ الشَّيَاطِيْنِ

நீங்கள் வசதியும், திருமணம் செய்து கொள்ளத் தகுதியும் உடையவராக இருந்து, திருமணம் செய்து கொள்ளவில்லை என்றால், நீங்கள் சைத்தானின் சகோதரர்களில் ஒருவராகிவிடுவீர்கள் என்று எச்சரித்தார்கள்.

இந்த சொற்றொடரின் அர்த்தத்தை ஒரு சாதாரண மாணவரால் கூட எளிதாகப் புரிந்து கொள்ள முடியும். அதாவது காமத்திற்கு சிறந்த சிகிச்சை, ஒரு ஆண் தனது மனைவியுடன் திருப்திகரமாக உடலுறவு கொள்வதாகும். அதனாலே மஹ்ரமல்லாதவர்களின் மீதுள்ள ஆசையிலிருந்து முற்றிலும் விடுபடுவது சாத்தியப்படும். ஏனெனில் ஒரு ஆண் தனது வீட்டில் ரொட்டியையும், பருப்பையும் வயிறு நிரம்ப சாப்பிட்டுவிட்டால், வீட்டிற்கு வெளியே பிரியாணி, ஹல்வா அல்லது கோழிக்கறியைக் கூட சாப்பிட விரும்ப மாட்டார் என்பது அனைவரும் அறிந்ததே.

ஒருவரின் பார்வை மஹ்ரமல்லாத பெண்ணின் மீது பட்டு, அவரது உள்ளம் அவளது அழகால் ஈர்க்கப்பட்டால், அந்த ஆண் உடனே தன் வீட்டிற்குச் சென்று தனது மனைவியுடன் உடலுறவு கொள்ளட்டும். ஏனென்றால் அந்தப் பெண்ணுக்கு என்ன உள்ளதோ, அது அனைத்தும் உங்கள் மனைவியிடமும் உண்டு என்ற அழகான தத்துவம் நபி ﷺ அவர்களின் தூய ஹதீஸிலிருந்து அறியப்படுகிறது.

اِنَّ الْمَرْأَةَ تَقَبَّلُ فِيْ صُوْرَةِ شَيْطَانٍ وَّ تَدَبَّرُ فِيْ صُوْرَةِ شَيْطَانٍ اِذَا اَحَدُكُمْ اَعْجَبَتْهُ الْمَرْأَةُ فَوَقَعَتْ فِيْ قَلْبِهِ فَلْيَعْمَدُ اِلَي اِمْرَأَةٍ فَلْيُوَاقِعُهَا فَاِنَّ ذَالِكَ يَرُدُّ مَا فِيْ نَفْسِهِ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள், சந்தேகமில்லாமல், ஒரு பெண் ஷைத்தானுடைய வடிவில் வந்து ஷைத்தானுடைய வடிவில் திரும்புகிறாள். உங்களில் ஒருவருக்கு ஏதேனுமொரு பெண்ணின் அழகு ஆட்சரியமளித்தால், உடனே அவர் தன் மனைவியிடம் உடலுறவு கொள்ளட்டும். இது தீய விளைவுகளை விட்டும் அவரை தூரமாக்கும்.

சில நேரங்களில் ஒரு பெண் முதல் பார்வையிலேயே தனது உடல் தோற்றத்தால் ஒரு ஆணை ஈர்த்திடுவாள். இதனால் ஒரு ஆணுக்குள் காம அலைகள் பொங்கி எழத் தொடங்கும். நபி ﷺ அவர்கள் இந்த உணர்ச்சிகரமான நிலைக்கு ஒரு அற்புதமான தீர்வாக அவ்வாறான சந்தர்ப்பத்தில் உங்கள் மனைவியுடன் உடலுறவு கொள்ளுங்கள். அதன் மூலம் இச்சை நீங்கிவிடுவதால் மீண்டும் ஷைத்தான் உங்களைப் பாவத்தில் ஈடுபடுத்தத் துணியாதபடி தோற்றுவிடுவான் என்று ஆலோசனை கூறியுள்ளார்கள்.

ஷர்ஹ் முஸ்லிமில், அல்லாமா நவவி ﵀ அவர்கள் இந்த ஹதீஸின் கீழ்

اِنَّهُ يَسْتَحِبُّ لِمَنْ رَأَي اِمْرَأَةً فَتَحَرَّكَتْ شَهْوَتُهُ اَنْ يَأْتِيْ اِمْرَأَتَهُ فَلْيُوَاقِعَهَا لَيَدْفَعُ شَهْوَتُهُ وَ تَسْكُنُ نَفْسُهُ وَ يَجْمَعُ قَلْبُهُ عَلَي مَا هُوَ بِصَدَدِهِ

“ஒரு பெண்ணைப் பார்த்ததினால் காம உணர்வு கொதித்தெழுந்த நபர் தன்னுடைய மனைவியுடன்

உடலுறவு கொள்ள வேண்டும். அதனால் இதயத்தின் ஆசை குளிர்ச்சியடையும். ஆன்மா அமைதியைக் காணும். இதயம் எதன் தேடலில் அலைந்து கொண்டிருந்ததோ அது நீங்கிவிடும் என்று எழுதியுள்ளார்கள்.

அதனால்தான் நம்முடைய ஷரியத் சட்டம் சில குறிப்பான தருணங்களில் ஒரு கணவன் தன் மனைவியுடன் உடலுறவு கொள்வதை ஊக்குவிக்கிறது.

- பயணம் செல்வதற்கு முன்
- பயணத்திலிருந்து திரும்பிய பிறகு
- ஹஜ் மற்றும் உம்ராவுக்காக இஹ்ராமில் நுழைவதற்கு முன்
- மஹ்ரம் அல்லாத ஒருவரைப் பார்த்ததினால் பாலியல் ஆசை தூண்டப் படும் போது
- மாதவிடாய் மற்றும் பிரசவத்தீட்டிலிருந்து சுத்தமான பிறகு

சட்டப்பூர்வமான வழியில் காமத்தைத் தணிப்பது சட்டவிரோத முறைகளைத் தவிர்ப்பதை எளிதாக்குகிறது என்பதை மேற்கண்ட உதாரணங்கள் காட்டுகின்றன. ஒரு ஆண் தன் மனைவியை அல்லாஹ்வின் அருட்கொடையாகக் கருதி, அவளை மதிக்க வேண்டும். அவளை மகிழ்ச்சியாக வைத்திருக்க தன்னால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும்.

அதேபோல், ஒரு மனைவி தன் கணவனை அல்லாஹ் வழங்கிய பாக்கியமாகக் கருதி, அவரை தாராளமாக நேசிக்க வேண்டும். அவருடைய சேவையில் அற்பணமாகிவிட வேண்டும். அவருக்கு மன மகிழ்வை உண்டாக்க எல்லா

முயற்சிகளையும் செய்ய வேண்டும். இந்த வழியில், கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவரும் அல்லாஹ்வின் திருப்தியை அடைவார்கள்.

ஒரு மனைவி தன் கணவனைப் பார்த்து சிரித்தாலோ அல்லது ஒரு கணவன் தன் மனைவியைப் பார்த்து சிரித்தாலோ, அல்லாஹ் இருவரையும் பார்த்து புன்னகைக்கிறான் என்று ஒரு ஹதீஸில் வந்துள்ளது. அதனால்தான் இச்சையைத் தணிக்க இயல்பான சிறந்த மருந்து திருமணம் என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள்.

يَا مَعْشَرَ الشَّبَابِ مَنِ اسْتَطَاعَ مِنْكُمُ الْبَائَةَ فَلْيَتَزَوَّجْ
فَاِنَّهُ اَغَضُّ لِلْبَصَرِ وَ اَحْصَنُ لِلْفَرْجِ

இளைஞர்களே, உங்களில் எவர் திருமணம் செய்து கொள்ள சக்தி பெற்றுள்ளாரோ அவர் அவ்வாறு செய்யட்டும். ஏனெனில் திருமணம் பார்வை அலைபாய்வதைத் தடுத்து, அந்தரங்க உறுப்புகளைப் பாதுகாக்கிறது.

இந்த ஹதீஸ் மேலே கூறப்பட்ட நிலையை மிக நன்றாக விளக்குகிறது. மேற்கொண்டும் பேசுவதற்குத் தேவையில்லை.

## இச்சையைத் தணிக்க இறைவேதம் கூறும் சிகிச்சை

ஒரு நபர் திருமணம் செய்து கொள்வதில் ஷரீயத் ரீதியான தடைகள் ஏதும் இருந்தால், அவர் பொறுமையைக் கடைப்பிடிப்பதின் மூலம் தன் கற்பைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

அல்லாஹ் கூறியுள்ளான்:

وَ لْيَسْتَعْفِفِ الَّذِيْنَ لَا يَجِدُوْنَ نِكَاحًا
حَتَّي يَغْنِيَهُمُ اللّٰهُ مِنْ فَضْلِهِ

**திருமணம் செய்து கொள்வதற்கான வசதி வாய்ப்பு இல்லாதவர்கள், அல்லாஹ் தனது அருளிலிருந்து அவர்களுக்கு ஆற்றல் அளிக்கும் வரை தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.**

தூய்மையான வாழ்வை கடைபிடிப்பவர்களுக்கு அல்லாஹ் மிக விரைவில் திருமணத்திற்கு வழி வகுப்பான் என்பதும் ஒரு பொதுவான அனுபவமாகும்.

ثَلَاثَةٌ حَقٌّ عَلَي اللّٰهِ عَوْنُهُمْ اَلْمُكَاتِبُ الَّذِيْ يُرِيْدُ الْاَدَاءَ
وَ النَّاكِحُ الَّذِيْ يُرِيْدُ الْعَفَافَ وَ الْمُجَاهِدُ فِيْ سَبِيْلِ اللّٰهِ

“மூன்று நபர்களுக்கு உதவி செய்வது அல்லாஹ்வின் மீது கடமையாகும்” என்று நபி ﷺ அவர்கள் கூறியதாக ஹஜ்ரத் அபூ ஹுரைரா ؓ அறிவிக்கிறார்கள்.

அவர்களில் ஒருவர் தன் விடுதலைக்குப் பிணைத் தொகை செலுத்த நினைக்கும் ஒரு அடிமை, இரண்டாவர் கற்புடன் இருக்க விரும்பி திருமணம் செய்து கொள்பவர். மூன்றாவர் அல்லாஹ்வின் பாதையில் போரிடுபவர். ஆக அல்லாஹ்வின் உதவியைப் பெறும் ஒருவரை அவரது இலக்கை அடைவதை விட்டும் யாராலும் தடுக்க முடியாது என்பது வெளிப்படையானது.

இச்சையைக் கட்டுப்படுத்துவதற்கு நான்கு விஷயங்கள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதாக புனித குர்ஆனில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## 1. தீய பார்வையைத் தவிர்ப்பது.

قُلْ لِلْمُؤْمِنِيْنَ يَغْضُوْا مِنْ اَبْصَارِهِمْ وَ يَحْفِظُوْا فُرُوْجَهُمْ

**விசுவாசிகளிடம் அவர்களுடைய பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளவும், அவர்களுடைய பிறப்புறுப்புகளைப் பாதுகாத்துக் கொள்ளவும் கூறுங்கள் என்று அல்லாஹ் உத்தரவிடுகிறான்.**

தீய பார்வை ஒருவருக்குள் காமத் தீயை மூட்டுகிறது. ஒரு பொத்தானை அழுத்தியவுடன் எந்திரம் இயங்கத் தொடங்குவது போல, அந்நியப் பெண்ணைப் பார்த்தவுடன் ஒருவரின் உடலில் சபல எண்ணங்கள் அவனுடைய உறுப்புக்களைத் தூண்டுகிறது. எனவே கற்பொழுக்கமுள்ள வாழ்வை விரும்புவோர் முதலில் தீய பார்வையைத் தவிர்ப்பது அவசியமாகும். பார்வை தூய்மையாக இல்லாவிட்டால், காமத் தீ பற்றுவதை ஒரு போதும் தடுக்க முடியாது.

அதனால்தான் குர்ஆனில் பார்வையைத் தாழ்த்திக் கொள்ளுமாறு கட்டளையிடப்பட்ட அதே நேரத்தில், ஒருவரின் அந்தரங்க உறுப்புகளைப் பாதுகாக்கவும் கட்டளையிடப்பட்டுள்ளது. இந்த இரண்டு விஷயங்களும் ஒன்றுக்கொன்று பிரிக்க முடியாதவை என்பது இதன் மூலம் நிரூபணமாகிறது.

## 2. ஒழுக்கக்கேடர்களுடன் உறவாடாமல் தவிர்ப்பது.

காமத்தைக் கட்டுப்படுத்த மற்றொரு வழி, ஒழுக்கக் கேடர்களின் சகவாசத்தைத் தவிர்ப்பதாகும். பாவிகள் மற்றும், ஒழுக்கக்கேடான நபர்களின் வார்த்தைகள் சில சமயங்களில் ஒரு நபரை பாம்பைப் போல கடித்து அவனுக்கு ஆன்மீக மரணத்தை ஏற்படுத்திவிடும்.

فَلَا يَصُدَّنَّكَ عَنْهَا مَنْ لَّا يُؤْمِنُ بِهَا وَ اتَّبَعْ هَوَاهُ فَتَرَدَّي

மறுமையை நம்பாமல் தன் மனோ இச்சையைப் பின்பற்றக் கூடியவர் அதை விட்டும் உங்களைத் தடுத்து நீங்கள் ஆபத்தில் விழுந்துவிட வேண்டாம் என்று அல்லாஹ் எச்சரிக்கிறான்.

இமாம் கஜ்ஜாலி ﵀ அவர்கள், ஒரு கெட்ட நண்பன் ஒரு விஷப் பாம்பு தீண்டுவதை விட ஆபத்தானவன் என்று எழுதியுள்ளார்கள். ஏனென்றால் பாம்பு கடித்தால் உடல் ரீதியான மரணமே ஏற்படும். அதே நேரத்தில் ஒரு கெட்ட நண்பனின் வார்த்தைகளோ அவனுக்கு ஆன்மீக மரணத்தை ஏற்படுத்திவிடும்.

மேலும், ஒரு கெட்ட நண்பன் சைத்தானை விட மோசமானவன். ஏனென்றால் சைத்தான் ஒருவரின் மனதில் பாவ எண்ணத்தை மட்டுமே ஏற்படுத்துவான். அதே நேரத்தில் ஒரு கெட்ட நண்பன் அவனுடைய கையைப் பிடித்து பாவம் செய்ய வைத்து விடுவான்.

ஒழுக்கத்துடன், பரிசுத்தமாக வாழ்ந்து கொண்டிருந்த நூற்றுக்கணக்கான இளைஞர்கள் ஒழுக்கக்கேடான நண்பர்களால் விபச்சாரம் வரை சென்ற அவலங்களும் நடந்துள்ளன என்று கூறியுள்ளார்கள்.

## 3. தொழுகையின் மூலம் உதவி தேடுதல்.

وَ اسْتَعِيْنُوْا بِالصَّبْرِ وَ الصَّلَاةِ

**பொறுமை, மேலும் தொழுகையைக் கொண்டு உதவி தேடுங்கள் என்று அல்லாஹ் கூறியுள்ளான்.**

ஒருவர் பொறுமையின் மூலம் தனது ஆசைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். அவனுக்குள் ஆசை புயலாக

பிரவாகமெடுக்கும் போது தொழுகையின் மூலமாக அல்லாஹ்விடம் உதவி கேட்க வேண்டும்.அதனால் அல்லாஹ் அவருடைய உள்ளத்தில் சாந்த உணர்வை ஏற்படுத்துவான்.

அத்தகைய நேரங்களில், இரண்டு ரக்அத்கள் ஸலாத்துல் ஹாஜத் தொழுது அல்லாஹ்விடம் துஆ செய்யுங்கள். அதனால் வியத்தகு விளைவுகள் ஏற்படுவதை கண்கூடாகக் காண்பீர்கள்.

اِنَّ الصَّلَاةَ تَنْهَي عَنِ الْفَحْشَاءِ وَ الْمُنْكَرِ

**நிச்சயமாக, தொழுகை மானக்கேடான காரியங்களையும், தீய செயல்களையும் விட்டுத் தடுக்கிறது என்று அல்லாஹ் கூறியுள்ளான்.**

திருமணமாகாத ஒருவர் இஷா தொழுகைக்குப் பிறகு அல்லது தஹஜ்ஜுத் தொழுகையின் போது இதற்காகத் தனியாக இரண்டு ரக்அத்கள் தொழுது அல்லாஹ்விடம் தனது ஆசைகளைக் கட்டுப்படுத்தக் கோருவது இலக்கை நோக்கிய அம்பு போல மிகப் பயனுள்ள சிகிச்சையாகும். இதனால் அவருக்குள் உருவான புயல் போன்ற ஆசையின் எழுச்சிகள் தடுக்கப்பட்டு, வெள்ளம் போன்ற காம எண்ணங்களின் குறுக்கே அணை கட்டப்பட்டு, கற்பு மற்றும் தூய்மையான வாழ்வு வாழ்வது எளிதாகிவிடும்.

### 4. அதிகமாக திக்ரு செய்தல்.

நம்முடைய மகான்கள் ஒரு நபருடைய சிந்தனையில் பதிந்துள்ள எண்ண அழுக்குகள் அதிகமாக திக்ரு செய்வதின் மூலமே நீங்கும் என்று கூறுவார்கள். ஒரு நபருடைய மனதில் சைத்தானிய எண்ணங்கள், காம உணர்வுகள்,

கீழ்த்தரமான சிந்தனைகள் நிலைத்திருப்பதையே சிந்தனை அழுக்கு என்று கூறுவார்கள். ஒரு இளைஞன் தனது கற்பனை உலகில் ஒரு கனவுக் காதலியுடன் சேர்ந்து பெரும்பாலும் (கற்பனை செய்வதன் மூலம்) காம இன்பங்களை அனுபவிப்பவனாக இருப்பான்.

நிற்கும்போதும், உட்கார்ந்திருக்கும்போதும், நடக்கும் போதும் கூட, அதே எண்ணங்கள் அவன் மனதில் பதிந்திருக்கும். இந்த நோய்க்கு சிகிச்சையளிக்கப்படாவிட்டால், விஷயம் மிகவும் மோசமாகிவிடும். தொழுகையின் நிலையிலும் கூட, அவனுடைய அதே எண்ணங்கள் தடையின்றி ஓடிக்கொண்டே இருக்கும்.

*நிற்பது, குனிவது பற்றி எனக்கு என்ன தெரியும்?*

*உன் தூய உருவத்தைத் தேடிக்கொண்டிருந்தேன். நானோ தொழுகையில் குனிந்தவனாக.*

இதனால் தொழுகை என்பது வெறுமனே நிற்றல், அமர்தல் என்ற சாதாரண அசைவுகளே தவிர வேறொரு உள்ளார்ந்த தத்துவமும் அதிலில்லை என்றாகிவிடும்.

அல்லாமா இக்பால் இதன் நிதர்சனத்தை மிக அழகாகக் கூறியுள்ளார்.

நான் எப்போது தரையில் தலைவைத்தேனோ தரையிலிருந்து ஒரு அசரிரி கேட்டது,

**உன் உள்ளமோ சிலைகளில் லைத்திருக்க, உடல் மட்டும் தொழுகையில் இருந்து என்ன பலன்.**

இத்தகைய சூழலில், அதிகம் திக்ரு செய்வாதனது அவருடைய சிந்தனையில் படிந்துள்ள அழுக்குகளை நீக்கக் கூடிய அருமருந்தாக அமைந்து விடும். ஆனால்

அதற்கு இடைவிடாத தொடர் முயிற்சி வேண்டும் என்பது நிபந்தனையாகும்.

## இச்சைகளைக் கட்டுப்படுத்த நபி ﷺ அவர்கள் பரிந்துரைத்த சில சிகிச்சைகள்.

### 1. நோன்பு நோற்றல்

فَمَنْ لَّمْ يَسْتَطِعْ فَعَلَيْهِ بِالصَّوْمِ فَاَنَّهُ لَهُ وِجَاءٌ

**திருமணம் செய்து கொள்ள இயலாதவர் நோன்பு நோற்கட்டும் என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள்.**

மேலும் நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: "திருமணம் செய்து கொள்ள வழியில்லாதவர் நோன்பு நோற்கட்டும். ஏனெனில் நோன்பு பாலியல் ஆசைக்கு கடிவாளமிடக் கூடியதாகும்." ஹதீஸில் உள்ள கடிவாளம் (விஜா) என்ற வார்த்தைக்கு காமத்தை அழிக்கக்கூடியது அல்லது அதற்கு முற்றுப்புள்ளி வைக்கக்கூடியது என்று பொருள் கொள்ளலாம்.

நோன்பின் நோக்கம் வயிற்றை காலியாக்கி பசியுடன் இருப்பதாகும். இது ஆணவம் மற்றும் காமம் இரண்டையும் நீக்கி விடுகிறது. ஒருமுறை, ஹஜ்ரத் பாயஜீத் பஸ்தாமி ﵀ அவர்கள் பசியின் சிறப்புகளை விவரித்துக் கொண்டிருந்தார்கள். இதுவும் ஒரு சிறப்பிற்குரியதா? என்று ஒருவர் அவர்களிடம் கேட்டார். அதற்கு அவர்கள் ஆம், ஃபிர்அவ்ன் மட்டும் பசியாக இருந்திருந்தால், தன்னையே இறைவன் என்று அவன் சொல்லியிருக்க மாட்டான் என்று கூறினார்கள். உண்மையில் வயிறு நிரம்பியதால்தான் அவனுடைய இந்த பிதற்றல்களெல்லாம் வந்துள்ளன என்று கூறினார்கள்.

இது வரை நோன்பு வைத்துப் பழக்கமில்லாத ஒரு இளைஞன் தொடக்கமாக ஒவ்வொரு மாதமும் 13 ,14 மற்றும் 15 (அய்யாமுல் பீழ்) ஆகிய மூன்று நாட்களில் நோன்பு வைத்துப் பழக வேண்டும். அந்தப் பழக்கம் நிலைபெற்ற பின்பும் அவனுடைய ஆசை முற்றிலுமாக முறியவில்லை என்றால், வாரத்திற்கு இரண்டு நாட்கள் திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில் கூடுதலாக நோன்பு நோற்க வேண்டும்.

இந்தப் பழக்கமும் நிலைபெற்று, மேலும் நோன்பு நோற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால், ஒரு நாள் நோன்பு வைப்பது, மறு நாள் நோன்பை விடுவது என்ற தாவூத் ﵇ அவர்களின் நோன்பு முறையைக் கடைப்பிடிக்க வேண்டும். இந்தப் பழக்கம் மிகச் சிறந்ததாகும்.

முதல் நாள் நோன்பு நோற்றவுடன் இச்சையில் எந்த மாற்றமும் ஏற்படாது என்பதை மனதில் கொள்ள வேண்டும். மேலே கூறியவாறு தொடர்ச்சியாக பல நாட்கள் நோன்பு நோற்கும் போதே அதிகப்படியான ஆசைகளுக்கு முற்றுப்புள்ளி ஏற்படும். அதிலும், சஹ்ர் மற்றும் இப்தாரின் போது வயிறு நிரம்ப சாப்பிடக்கூடாது என்பது அவசியமாகும். இல்லையெனில் இதனாலும் நோன்பின் நோக்கம் வீணாகிவிடும்.

## 2. ஒழுவுடனே இருத்தல்

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

اَلْوُضُوْءُ سِلَاحُ الْمُؤْمِنِ

**ஒளூ ஒரு முஃமினின் ஆயுதமாகும்.**

எனவே, சைத்தானுடைய தாக்குதல்களைத் தவிர்ப்பதற்கு

எந்நேரமும் ஒழுவுடன் இருத்தல் ஒரு சிறந்த தீர்வாகும். குறிப்பாக இளைஞர்கள் எந்நேரமும் ஒழுவுடன் இருப்பதைப் பழக்கமாக்கிக் கொண்டால், வணக்க வழிபாடுகள் செய்வது எளிதாகிவிடும். அத்துடன் ஒழு ஒருவருக்கு உள ஐக்கியத்தைத் தருகிறது மற்றும் அவரை கவலைகளிலிருந்து விடுவிக்கிறது.

### 3. துஆ கேட்பது

காமத்தைக் கட்டுப்படுத்துவதற்கு ஒரு அழகான தீர்வாக, என்னுடைய ரப்பே நான் பலவீனமாக இருக்கிறேன். எனக்கு உதவி செய்து பாவத்தில் ஈடுபடுவதிலிருந்து என்னைப் பாதுகாப்பாயாக என்று அல்லாஹ்விடம் அதிகம் துஆ கேட்க வேண்டும். இது சம்பந்தமாக நபி ﷺ அவர்களிடமிருந்து ஏராளமான துஆக்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஹஜ்ரத் அபூ உமாமா رضي الله عنه அவர்கள் கூறுவதாவது: ஒரு வாலிபர் நபி ﷺ அவர்களிடம் வந்து விபச்சாரம் செய்ய அனுமதி கேட்டார். நபித் தோழர்கள் அவருடைய இந்தக் கேள்வியை மிகவும் வெறுத்து அவரைத் அதட்டினார்கள். ஆனால் நபி ﷺ அவர்கள் அவரை அருகில் அழைத்து, “உன் தாயாருடன் யாராவது விபச்சாரம் செய்வதை நீ விரும்புவாயா?” என்று கேட்டார்கள். அவர், “இல்லை” என்றார். அவ்வாறே, “உன் மகளுடன் யாராவது விபச்சாரம் செய்வதை நீ விரும்புவாயா?” என்று கேட்டார்கள், அவர், “இல்லை” என்றார்.

அவ்வாறே, “உன் சகோதரியுடன் யாராவது விபச்சாரம் செய்வதை நீ விரும்புவாயா?” என்று கேட்டார்கள். அவர், “இல்லை” என்றார். “உன் அத்தையுடன் யாராவது விபச்சாரம் செய்ய நீ விரும்புவாயா?” என்று கேட்டார்கள்.

அவர், “இல்லை” என்றார். “உன் குப்பியுடன் யாராவது விபச்சாரம் செய்ய நீ விரும்புவாயா?” என்று கேட்டார்கள். அவர், “இல்லை” என்றார்.

பின்னர் நபி ﷺ அவர்கள் கூறினார்கள், நீ யாராவது ஒருவருடன் விபச்சாரம் செய்யும் போது, அவள் யாரோ ஒருவரின் தாயாக, மகளாக, மனைவியாக, அத்தையாக, குப்பியாகத்தானே இருப்பாள். ஆக யாராக இருந்தாலும், நீங்கள் இது போன்ற தவறை உங்களுடைய உறவினருடன் விரும்பாதது போலவே, மக்கள் தங்கள் மஹ்ரமான பெண்களுடன் மற்றவர் அந்த தவறைச் செய்வதையும் விரும்பமாட்டார்கள் என்று விளக்கினார்கள்.

பின்னர் நபி ﷺ அவர்கள் அந்த இளைஞனின் நெஞ்சில் கை வைத்து,

اَللَّهُمَّ اغْفِرْ ذَنْبَهُ وَ اذْهَبْ قَلْبَهُ وَ اَحْصِنْ فَرْجَهُ

**யா அல்லாஹ், இவருடைய பாவங்களை மன்னித்து, இவருடைய இதயத்தைத் தூய்மைப்படுத்தி, இவருடைய அந்தரங்க உறுப்புகளைப் பாதுகாப்பாயாக என்று துஆ செய்தார்கள்.**

இந்த துஆவின் விளைவாக அந்த இளைஞனின் உள்ளத்தில் விபச்சாரம் பற்றிய எண்ணம் மறுமுறை ஏற்படவில்லை.

ஹதீஸ்களில் நபி ﷺ அவர்களிடமிருந்து இன்னும் பல துஆக்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றை ஓதுவதும் பெரும் பலன்களைத் தரக்கூடியதாகும்.

اَللَّهُمَّ اِنِّيْ اَسْاَلُكَ الْهُدَى وَالتَّقَى وَالْعَفَافَ وَالْغِنَى

**யா அல்லாஹ், நான் உன்னிடம் நேரான பாதையையும், இறையச்சத்தையும், பரிசுத்தமான வாழ்வையும், போதுமென்ற தன்மையையும் கேட்கிறேன்.**

சில நேரங்களில் பின்வரும் வார்த்தைகளில் துஆ கேட்டுள்ளார்கள்:

اَللّٰهُمَّ اِنِّيْ اَسْاَلُكَ الصِّحَّةَ وَالْعِفَّةَ وَالْحُسْنَ وَالرِّضَا بِالْقَدْرِ

**யா அல்லாஹ், நான் உன்னிடம் ஆரோக்கியத்தையும், பரிசுத்தமான வாழ்வையும், நன்மையையும், விதியின் மீது திருப்தியையும் கேட்கிறேன்.**

மேலும் பின்வரும் வார்த்தைகளில் துஆ செய்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

اَللّٰهُمَّ اَلْهِمْنِيْ رُشْدِيْ وَاعْذِنِيْ مِنْ شَرِّ نَفْسِيْ

**யா அல்லாஹ், என்னை நேரான பாதையில் வழி நடத்துவாயாக, என் ஆன்மாவின் தீமையிலிருந்து எனக்கு அடைக்கலம் அளிப்பாயாக.**

ஹதீஸ்களில் பின்வரும் துஆவும் குறிப்பிடப்பட்டுள்ளது:

اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُ بِكَ مِنْ مُنْكَرَاتِ الْاَخْلَاقِ وَالْاَعْمَالِ وَالْاَهْوَاءِ

**யா அல்லாஹ், ஒழுக்கக்கேடு, தீய செயல்கள் மற்றும் தீய ஆசைகளிலிருந்து நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.**

இந்த துஆவும் சில ஹதீஸ்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُ بِكَ مِنْ فِتْنَةِ النِّسَاءِ

**யா அல்லாஹ், பெண்களின் சோதனையிலிருந்து நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்.**

முன்னோர்களின் வாழ்வை ஆராயும் போது அவர்கள் துஆ ஏற்கப்படும் சந்தர்ப்பங்களில் இச்சையின் சோதனையிலிருந்து அல்லாஹ்விடம் அடைக்கலம் தேடியுள்ளதாக அறிய முடிகிறது. ஹஜ்ரத் பா யஜித் பஸ்தாமி ﵀ அவர்களுக்கு ஒரு நாள் இரவு காம உணர்வு கட்டுக்கடங்காமல் செல்வதை உணர்ந்தார்கள். உடனே அவர்கள் இரண்டு ரக்அத்கள் நஃபில் தொழுதுவிட்டு, அல்லாஹ்விடம் துஆவில் அதிகம் மன்றாடினார்கள். இதற்குப் பிறகு, ஒரு பெண்ணுக்கும், சுவருக்கும் மத்தியில் எந்த வித்தியாசமும் இல்லாத ஒரு அதிசய நிலை எனக்கு ஏற்பட்டுவிட்டது என்று கூறினார்கள்.

துஆக்கள் ஓதுவதன் மூலம் ஏற்றுக் கொள்ளப் படுவதில்லை, மாறாக அவற்றைக் கேட்பதன் மூலமே ஏற்றுக் கொள்ளப்படுகின்றன என்பதை நினைவில் கொள்ள வேண்டும். துஆக்கள் கேட்பதன் அர்த்தம் என்னவென்றால், ஒருவர் துஆவின் முழு உருவமாகவே மாற வேண்டும். கண்கள் அழாவிட்டாலும், உள்ளம் அழ வேண்டும். உள்ளத்தின் ஆழத்திலிருந்து, “ஓ என் இறைவா, நான் பலவீனமானவன். நீ வலிமையானவன். ஒவ்வொரு பலவீனமானவரும் வலிமையானவரை உதவிக்கு அழைப்பார். எனவே, பெண்களின் சோதனையிலிருந்து என்னைப் பாதுகாப்பாயாக, என் காமத்தை கட்டுப்படுத்த எனக்கு உதவி செய்வாயாக” என்று துஆ செய்ய வேண்டும்.

இவ்வாறு துஆ செய்த பின் என்ன விளைவு ஏற்படுகிறது என்பதைப் பாருங்கள். உண்மையான இறைவனின் சத்திய குர்ஆன் சாட்சியமளிக்கிறது?

اَمَنْ يَجِيْبُ الْمُضْطَرُّ إِذَا دَعَاهُ وَ يَكْشِفُ السُّوْءَ

அமைதியற்றவர் தன்னை அழைக்கும்போது அவரது பிரார்த்தனையை ஏற்றுக்கொள்பவர் யார்? என்று அல்லாஹ் கேட்கிறான்.

## இச்சையை அடக்க எளியவனின் அனுபவ சிகிச்சை

ஒரு நோயாளி ஒரு மருந்திலிருந்து நிவாரணம் மற்றும் ஆரோக்கியத்தைப் பெற்றால், அவர் மற்ற நோயாளிகளிடம் இந்த மருந்து மிகவும் பயனுள்ளது என்று வெளிப்படையாகக் கூறுவது இலேசான விஷயமாகும். நீங்களும் அதை முயற்சித்துப் பாருங்கள் என்று பிற நோயாளிகளையும் ஆர்வப்படுத்துவார். அதன்படி இவ்விஷயத்தில் அடியேனின் வாழ்வில் பயன்பெற்ற சில அனுபவக் குறிப்புகளை வாசகர்களுக்கு தொகுத்தளிக்கிறேன்.

**சும்மா இருக்காதே:-**

காமத்தைக் கட்டுப்படுத்த சிறந்த வழி, உங்கள் தலையைச் சொறியக் கூட நேரம் கிடைக்காத அளவுக்கு வேலையில் மும்முரமாக ஈடுபட வேண்டும். இரண்டு வேலைகளைச் செய்ய வேண்டியிருக்கும் போது, இடையில் மூன்றாவது ஒரு வேலையையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். உடல் ஓய்வைத் தேட, கண்கள் தூக்கத்திற்காக ஏங்கும் நிலை உருவாக வேண்டும். தூங்கும்போது

தலையணையில் முதலில் தலை வைத்தீரா அல்லது தூக்கம் முதலில் வந்ததா என்று தெரியாத அளவுக்கு அயராது பாடுபட வேண்டும்.

ஓயாத வேலை கொஞ்சம் ஓய்வு என்ற நிலை உருவாக வேண்டும். நாள் முழுவதிற்குமான ஒரு திட்டத்தை உருவாக்குங்கள். மாணவர்கள் தங்கள் முழு நேரத்தையும் படிப்பில் அற்பணிக்க வேண்டும். மதரஸாக்களில் மார்க்கக்கல்வி பெறும் மாணவர்கள் அஸர் முதல் மஃரிப் வரை விளையாடுவதை படிப்பதைப் போலவே அவசியமாகக் கருத வேண்டும். தங்கள் ஓய்வு நேரத்தில் தனிப்பட்ட முறையில் புத்தகங்களைப் படித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

புத்தகங்களை உங்கள் இணைபிரியா நண்பர்களாக்கிக் கொள்ளுங்கள். மதரஸாவை தங்கள் தாயகமாகக் கருதுங்கள். புத்தகங்களின் காகிதத்தை உங்களின் கஃபன் துணியாகக் கருதுங்கள். உங்களிடம் நேரம் இருந்தால், புனித குர்ஆனை மனனம் செய்வதிலோ அல்லது மனனம் செய்தவற்றை உறுதிப்படுத்துவதிலோ ஈடுபடுங்கள். உங்களிடம் இன்னும் உபரியான நேரங்களிருந்தால், ஒரு ஷேகுடைய, அல்லது ஷைகுல் ஹதீஸுடைய, அல்லது ஒரு முஃப்தி சாஹிப் அல்லது ஒரு ஆசிரியருடைய சகவாசத்திலும், சேவையிலும் செலவிடுங்கள்.

தம்போன்ற சக வாலிபர்களுடன் நோக்கமின்றி அமர்ந்திருப்பதை விஷமாகக் கருதுங்கள். ஒரு பிரபலமான பழமொழி உண்டு:

**A young leading the young is like a blind leading the blind they will be both fall in to the ditch.**

ஒரு இளைஞன் மற்ற இளைஞர்களுக்குத் தலைவனாக மாறினால், அது ஒரு குருடன் இன்னொரு குருடனிடம் தடியைக் கொடுத்து வழிகாட்டக் கூறுவது போன்றாகும். இருவரும் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் ஒரு குழியில் விழலாம் என்பது உறுதி.

பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் தங்கள் ஓய்வு நேரத்தில் புனித குர்ஆனின் மொழிபெயர்ப்பைப் படிப்பதை தங்கள் விருப்பமான பொழுதுபோக்காக மாற்றிக்கொள்ள வேண்டும். அருகிலுள்ள பள்ளிவாசல் அல்லது மதரஸாவில் இருக்கக்கூடிய ஒரு அறிஞரிடமிருந்து அரபு மொழயின் அடிப்படை இலக்கணங்களைக் கற்கத் தொடங்குங்கள். உங்களுக்கு இன்னும் நேரமிருந்தால், பகுதி நேர ஆலிம் படிப்பில் மாணவராகச் சேர்ந்து ஹதீஸ் புத்தகங்களைப் படிக்கத் தொடங்குங்கள்.

சமகால கல்வி ஞானத்துடன் மார்க்கக் கல்வியை பயில்வதன் மூலம் ஒருவர் இரண்டு நதிகளின் சங்கமமாக மாறுவார். மேலும் உங்களுடைய நினைவாற்றல் நன்றாக இருந்து, உங்களுக்கு நேரமும் கூடுதலாகக் கிடைத்தால், புனித குர்ஆனை மனப்பாடம் செய்யத் தொடங்குங்கள். படிப்பதில் சற்று சடைவு ஏற்பட்டாலோ அல்லது மனம் சோர்வடைந்தாலோ ஊனமுற்ற ஒருவருக்கோ அல்லது ஒரு நோயாளிக்கோ அடக்கத்துடன் சேவை செய்ய பொறுப்பெடுத்துக்கொள்ளுங்கள்.

தற்காலத்தில் அலுவலகங்களில் பணிபுரியும் இளைஞர்களும் மார்கக் கல்வியைப் படிப்பதற்கான வாய்ப்பு உருவாகியுள்ளது. இன்னும் வீட்டு வேலைகளில் உங்கள் நேரத்தை செலவிட முடிந்தால், அதை நபி ﷺ

அவர்களின் சுன்னாவாகக் கருதி சந்தோஷமாக ஈடுபடுங்கள். உங்கள் வயதான பெற்றோருக்கு சேவை செய்வதை ஒரு பாக்கியமாகக் கருதுங்கள். இம்மை மற்றும் மறுமையின் சகல முன்னேற்றங்களும் உங்களுக்குக் கிடைக்க அவர்களின் பிரார்த்தனைகள் அவசியமானது என்பதை ஒருபோதும் மறந்து விடாதீர்கள்.

உங்களிடம் நேரம் இருந்தால், ஒரு சரியான ஷேக்கின் அரவணைப்பில் நேரத்தை செலவிடுங்கள் அல்லது தப்லிக் ஜமாஅத்துடைய அமல்களில் உங்களை இணைத்துக் கொள்ளுங்கள். எந்த வேலையுமின்றி சும்மா இருப்பதை தடைசெய்யப்பட்டதாகக் கருதுங்கள்.

ஒரு அனுபவமிக்க நபரின் கூற்றாவது

**An Ideal mans brain is devol›s workshop**

எந்த வேலையுமில்லாத மனிதனின் மனம் சைத்தானுடைய பட்டறையாகும். ஒரு தொழிற்சாலையில் இயந்திரங்கள் தயாரிக்கப்படுவது போல, எந்த வேலைகளுமில்லாத ஓய்வான மனிதனின் மனதில் இச்சைகள், மற்றும் பாவச் செயல்களுக்கான திட்டங்கள் உருவாகின்றன. ஓய்வு நேரத்தில் இறை நேசர்களின் வரலாறுகளை படியுங்கள். அது மக்களின் இறந்த இதயங்களுக்கு உயிர் கொடுக்கும். அவர்களின் வார்த்தைகள் மருந்தாகவும், அவர்களின் பார்வை நிவாரணியாகவும் இருக்கும்.

## தனியாக இருக்காதே:-

காமத்தைக் கட்டுப்படுத்துவதற்கான பொன்னான இரண்டாவது விதி, தனியாக இருப்பதைத் தவிர்ப்பதாகும். சமூகத்தை விட்டும் தனித்திருப்பதை உங்கள் அடையாளமாக

ஆக்க வேண்டாம். ஒரு இளைஞன் தனியாக இருக்கும் போதெல்லாம், சைத்தான் அவனை ஒரு கற்பனை நேசத்தின் குகைக்குள் அழைத்துச் சென்றுவிடுவான்.

பொதுவாக படிப்பதாக இருந்தாலும் பிறர் பார்க்கக்கூடிய இடத்தில் அமர்ந்து படியுங்கள். மூடிய அறைகளில் அமர்ந்திருப்பது சைத்தானுக்கு ஒரு நபரை சீண்டிப் பார்க்க வாய்ப்பை அளிக்கிறது. அவன் ஏதோ ஒரு அழகான முகத்தை அவனுடைய கண்முன் கொண்டுவந்து நஞ்சைப் புகுத்தி விடுவான்.

ஒரு கவிஞர் கூறுகிறார்

**நீங்கள் மரணத்திற்கு அருகில் இருப்பது போல் இருக்கிறது.**

**அங்கு வேறு யாரும் இல்லாதபோது.**

எப்போதவது தனிமையில் இருக்கும் போது மனதில் காமத் தீ பற்றி எரிந்தால், உடனடியாக அறையை விட்டு பொது வெளிக்கு வந்து விடுங்கள். ஒரு நபரின் காமம் அதிகரிக்கும் போது, அவருடைய புத்தியில் பாதி திறையிடப்பட்டுவிடுகிறது என்று ஒரு உளவியலாளர் கூறுகிறார். அத்தகைய சூழ்நிலையில், அவன் தனிமையில் இருந்தால், அவனுடைய அறிவு முழுக்க மறைந்துவிடுவது இலகுவாகிவிடும். தனிமை மற்றும் அறுவறுக்கத்தக்கப் பாவங்கள் இரண்டும் பஞ்சும் நெருப்பும் போன்றதாகும்.

ஆனால் ஒரு சிறு வயது குழந்தை ஒரு இளைஞனுக்கு அருகில் இருந்தாலும், அவன் ஆபாசமான செயல்களைச் செய்வதிலிருந்து தவிர்ந்து கொள்கிறான். யாரும் தன்னைப் பார்க்கவில்லை என்று நினைக்கும் போது தான் அவன் பாலியல் செயல்பாடுகள் மற்றும் ஆபாச காரியங்களில் ஈடுபடுகிறான். தனித்திருத்தல் எப்போதும்

வயதானவர்களுக்கு நன்மை பயக்கக்கூடியதும், அதே நேரத்தில் அது இளைஞர்களுக்கு தீங்கு விளைவிக்கக்கூடியதுமாகும்.

இளமைப் பருவத்திலேயே முதியவர்கள் போன்ற விவேமிக்க மூளையைப் பெற்ற இளைஞர்கள் மிகக் குறைவானவர்களே உள்ளனர். ஒரு முறை ஒரு மாணவர் நான் தனியாக இருக்கும் போதெல்லாம், என் ஆண்குறி ஒருவித உற்சாக நிலையை அடைகிறது என்று தன்னைப் பற்றி கூறினார். ஆக இத்தகைய இளைஞர்கள் தனித்திருப்பதை ஹராமானாதாகக் கருத வேண்டும்.

அவ்வாறே தனித்திருக்கும் இரு வாலிபர்கள் சட்டப்படி ஒரு தனியாக இருக்கும் வாலிபனைப் போன்றவர்களாவர். சொல்லப்போனால் அவர்கள் இன்னும் அபாயத்தில் உள்ளவர்களாவர். அவ்வாறே தனிமையில் நிர்வாணமாக இருப்பதைக் குறித்தும் மிக எச்சரிக்கையாக இருங்கள். நபி ﷺ அவர்கள் ஒரு மனிதரிடம் கூறினார்கள்:

اِحْفِظْ عَوْرَتَكَ اِلَّا مِنْ زَوْجَتِكَ اَوْ مَا مَلَكَتْ يَمِيْنَكَ فَقَالَ اَفَرَأَيْتَ إِذَا كَانَ الرَّجُلُ خَالِيًا قَالَ فَاللّٰهُ أَحَبُّ أَنْ يَسْتَحِيْ مِنْهُ

உங்களுடைய மறைவிடத்தைப் உங்கள் மனைவி அல்லது அடிமைப் பெண்களைத் தவிர பிற அந்நியப் பெண்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள். பிறர் பார்வை படாதவாறு யாராவது தனியாக இருந்தால் அப்போது நிர்வாணமாக இருக்கலாமா என்று ஒருவர் கேட்ட போது அப்போதும், அல்லாஹ்வுக்கு முன்பாக வெட்கப்படுவது அவசியம் என்று கூறினார்கள்.

## தூக்கம் வராமல் படுக்கைக்குச் செல்வதைத் தவிர்க்கவும்:-

இளைஞர்கள் முதலில் தலையணையில் தலை வைத்தார்களா அல்லது முதலில் கண்மூடியதா என்று தெரியாத அளவு தூக்கம் கண் நிரம்ப இருக்கும் போதே படுக்கைக்குச் செல்ல வேண்டும். கண்கள் திறந்தவுடன், அவர்கள் உடனடியாக படுக்கையை விட்டு எழுந்திருத்து விட வேண்டும்.தூங்காமல் படுக்கையில் வெறுமனே புரண்டு கொண்டிருத்தல் இச்சையைத் தூண்டக்கூடியதாகும்.

பிள்ளைகள் தூங்காமல் வெறுமனே படுக்கையில் புரண்டு கொண்டிருப்பதை பெற்றோர்கள் கவனிக்க வேண்டும். அவர்களுக்கு தனித்தனி படுக்கையறைகள் இருந்தால், அறையை உள்ளிருந்து மூடுவதற்கு எந்த ஏற்பாடும் இருக்கக்கூடாது. பெண் பிள்ளைகளின் அறையில், தாய் எப்போது வேண்டுமானாலும் கதவைத் திறந்து உள்ளே நுழைய முடியுமாறு அறையின் வடிவமைப்பு இருக்க வேண்டும்.

அவ்வாறே தந்தை எப்போது வேண்டுமானாலும் ஆண்பிள்ளைகளின் அறைக்குள் வந்து செல்லும் விதத்தில் அறையின் அமைப்பு இருக்க வேண்டும்.

## இருட்டில் தூங்குவதற்குப் பதிலாக வெளிச்சத்தில் தூங்கப் பழக்கப்படுத்துங்கள்:-

பிள்ளைகள் இருட்டில் தூங்குவதற்குப் பதிலாக வெளிச்சத்தில் தூங்கக் கற்றுக் கொடுக்க வேண்டும். பெற்றோர்கள் தங்கள் குழந்தையின் தூங்கும் நேரம், மற்றும் இன்னபிற பழக்க வழக்கங்கள் என்ன?, அவர்கள் எங்கு சென்று வருகிறார்கள் என்பதைப் பற்றி அறிந்திருக்க வேண்டும். இளைஞர்கள் மல்லாக்க

படுத்து தூங்குவதைத் தவிர்க்க வேண்டும். இதுபோன்ற சூழ்நிலையில், வயதானவர்களின் உறுப்புகளும் கிளர்ச்சி அடையும் போது இளைஞர்களுக்குக் கூடுதல் கிளர்ச்சி ஏற்படுவது தவிர்க்க இயலாது.

ஒரு ஹதீஸில், இப்னு தக்ஃஃபா கிஃஃபாரி ؓ அவர்கள் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கிறார்கள். அவருடைய தந்தை கூறினார்,

قَالَ اَبِيْ بَيْنَمَا اَنَا مُضْطَجِعٌ فِيْ الْمَسْجِدِ عَلَي بَطْنِيْ إِذَا رَجْلٌ يَحْرِكُنِيْ بِرِجْلِهِ فَقَالَ اَنَّ هَذَهِ ضَجْعَةً يَبْغَضُهَا اللّٰهُ قَالَ فَنَظَرْتُ فَاِذَا هُوَ رَسُوْلُ اللّٰهِ

நான் மஸ்ஜிதில் ஒரு முறை குப்புறப் படுத்திருந்த போது திடீரென்று ஒருவர் என்னை தனது காலால் நகர்த்தினார். இது அல்லாஹ்வின் கோபம் ஏற்பட்டுள்ள நபர்களின் படுக்கை முறையாகும் என்று கூறினார். நான் எழுந்து பார்த்த போது அது அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் என்பதைக் கண்டு கொண்டேன்.

இரண்டு இளைஞர்கள் சேர்ந்தவாறு ஒரே படுக்கையில் அல்லது விரிப்பில் ஒருபோதும் தூங்கக்கூடாது. விடுதி மேற்பார்வையாளர்கள் ஒரு அறையில் மூன்று மாணவர்களை விட குறைவானவர்கள் தங்க அனுமதிக்கக்கூடாது.

## கழிப்பறையில் அதிக நேரம் கழிக்க வேண்டாம்:-

கழிப்பறை என்பது அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான இடமாகும். எனவே அத்தேவை முடிந்தவுடன் வெளியே வந்து விட வேண்டும். சில இளைஞர்கள் கழிப்பறையை சிற்றன்னையின் வீடாக

கருதி ஒரேடியாக உட்கார்ந்து விடுகின்றனர். அங்கு நிர்வாண நிலை ஏற்படுவதால் இலகுவாக இச்சைத் தீ பற்றிக் கொள்ளும். அவ்வாறே கழிப்பறையில் இருக்கும் போது அவசியத் தேவையில்லாமல் பிறப்புறுப்பில் கைவைக்கக்கூடாது.

இல்லையெனில் கைகளால் விபச்சாரம் செய்யும் பழக்கம் ஏற்பட்டு விடும். பிறப்புறுப்பில் வளர்ந்துள்ள முடியை சுத்தம் செய்கின்ற போதும் அதிக நேரம் எடுக்கக்கூடாது. பிள்ளைகள் கழிப்பறையில் எவ்வளவு நேரம் செலவிடுகிறார்கள் என்பதை தாய் தந்தை கவனிப்பது கட்டாயமாகும்.

படுக்கை விரிப்பு மற்றும் கழிப்பறை ஆகிய இரண்டு இடங்களில் தன்னை பாவத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் இளைஞருக்கு பரிசுத்தமான, பத்தினித்தனமான வாழ்வு வாழ்வது மிகவும் எளிதானதாகும்.

கழிவறைக்குச் செல்லும் போது ஓதக்கூடிய சுன்னத்தான துஆக்களை அதன் அர்த்தங்களை மனதில் கொண்டு ஓதுவது மிகப் பயனுள்ளதாக இருக்கும்.

வாலிபப் பிள்ளைகள் கழிப்பறையில் அதிக நேரம் செலவழித்தால், முதலில் தாய்மார்கள் சொல்லிப் புரிய வைக்க வேண்டும். சொல்லிப் புரியாத போது சற்று அதட்டும் நடவடிக்கையில் இறங்க வேண்டும்.மீண்டும் அதிக நேரம் எடுக்கும்போது உடனடியாக கழிவறைக் கதவைத் தட்ட வேண்டும். வாலிபப் பிள்ளைகள் கழிப்பறையில் சில நிமிடங்கள் கூடுதலாக இருந்தால் உடனே அம்மா கதவைத் தட்ட ஆரம்பித்து விடுவாரே, திட்ட ஆரம்பித்து விடுவாரே என்று பயப்பட்டு வெளியே வந்து விட வேண்டும். அது போன்று நம்முடைய கண்காணிப்பை பலப்படுத்த வேண்டும்.

## ஆபாச நகைச்சுவையிலிருந்து விலகியிருத்தல்:-

பொதுவாக பதின்ம வயதில் கேலி மற்றும், நகைச்சுவை உணர்வு சற்று கூடுதலாக இருக்கும். வாலிபர்களான ஆண்களும், பெண்களும் நகைச்சுவைகளை ரசித்துக் கேட்பார்கள். ஆனால் அதிகம் சிரிப்பதினால் உள்ளம் மரணித்து விடும் என்பதை புரிய மாட்டார்கள்.

இந்த பழக்கவழக்கத்தை கட்டுப்படுத்தவில்லையானால் வாலிபர்களுக்கு மத்தியில் கேலிக் கூத்துக்கள் அதிகமாகிவிடும். காலம் கழிய கழிய சகஜமான தொடர்புகள், நெருக்கமான நட்புகள் கொண்ட நபர்களுடன் இது ஆபாசமான அரட்டை களாக மாறிவிடும். இது மிகவும் ஆபத்தான விஷயமாகும்.

اِنَّ الَّذِيْنَ يُحِبُّوْنَ اَنْ تَشِيْعَ الْفَاحِشَةُ فِيْ الَّذِيْنَ آمَنُوْا لَهُمْ عَذَابٌ اَلِيْمٌ فِيْ الدُّنْيَا وَ الْآخِرَةَ وَ اللّٰهُ يَعْلَمُ وَ أَنْتُمْ لَا تَعْلَمُوْنَ

**யார் விசுவாசம் கொண்டோரிடத்தில் ஆபாசம் பரவ வேண்டும் என்று விரும்புகிறார்களோ அவர்களுக்கு கடுமையான வேதனை இம்மையிலும் மறுமையிலும் இருக்கிறது. அல்லாஹ்வே நன்கு அறிந்தவன். உங்களுக்கு ஒன்றும் தெரியாது என்று அல்லாஹ் கூறியுள்ளான்.**

சில இளைஞர்கள் ஒருவரையொருவர் சந்தித்து இன்று நீ குளித்திருப்பதாகத் தெரிகிறதே ! என்று கேட்கின்றனர். இந்த ஒரு கேள்வியின் மூலம் ஆபாசக் கேளிக்கைகளின் வாயில் திறந்துவிடும்.

சில வாலிபர்கள் ஒருவரையொருவர் விருப்பத்துடன் ஆபாசமான வார்த்தைகளால் வசை பாடிக் கொள்கின்றனர். இதைவிட மிக பாவகரமான விஷயம் வேறென்ன இருக்க முடியும்.

சில இளைஞர்கள் ஒருவர் மற்றவரின் உடலை பிடித்து அழுத்தியோ, கூசி விடுவதன் மூலமோ கேலி செய்கிறார்கள். இது ஆபாசத்தின் கதவைத் திறக்கக்கூடிய திறவுகோல் ஆகும்.

சில இளைஞர்கள் சந்திக்கும் போது ஒருவரையொருவர் அழுத்தமாக கட்டியணைக்கிறார்கள். இதன் மூலம் அவர்ளுடைய பிறப்புறுப்புக்களை ஒருவர் மற்றவரின் உடலோடு உரசும் வாய்ப்பு ஏற்படுகிறது. இதனால் காம உணர்வுகள் மேலிட்டு தவறுக்கான வழி எளிதாகிவிடுகிறது.

ஆபாச நகைச்சுவையின் பழக்கம் உறவினர்களான ஆண், பெண்ணுக்கிடையில் வந்து விட்டால் அது ஆபத்தானதாகும். அதிலும் குறிப்பாக கொழுந்தன், கொழுந்தியா, சிற்றன்னை, சகோதரி மகன் போன்றோரிடத்தில் கேலி கிண்டல் பழக்கம் மிக ஆபத்தானதாகும்.

இது ஒரு கவிஞரின் கூற்றின் படி

*அவ்வாறே பேச நேர்ந்து விட்டது உன் வாலிபத்தைப் பற்றி*

என்ற நிலை உருவாகிவிடும்.

சில திருமணமான ஆண்கள் வாலிப பையன்களுக்கு தங்களுடைய திருமண வாழ்வில் பிறருக்கு மறைக்க வேண்டியத் தகவல்களை எவ்விதக் கூச்சமின்றி அடிக்கடி கூறுகின்றனர். இதனால் அவர்களது கற்பனையில் ஆண் பெண் உறவு கொள்வதை கண்கூடாகக் காண்பதைப் போன்ற நிலை உருவாகிவிடுகின்றது. இதுவும் மிக மோசமான விஷயமாகும்.

பரிசுத்தமான நபிமொழியில் வந்துள்ளாவது.

اِنَّ مَنْ أَشَرُّ النَّاسَ عِنْدَ اللّٰهِ مَنْزِلَةٌ يَوْمَ الْقِيَامَةِ اَلرَّجُلُ

يَفْضَيَ اِلَي اِمْرَاَةٍ وَّ تَفْضَيَ اِلَيْهِ ثُمَّ يَنْشُرُ سِرَّهَا

**மறுமை நாளில் அல்லாஹ்விடம் மிக மோசமான நபர், தனது மனைவியோடு தாம்பத்தியம் வைத்து விட்டு அதை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தக்கூடியவராவார். அத்தகைய நபரின் பேச்சைக் கேட்பதும் கூட தடை செய்யப்பட்டுள்ளதாகும்.**

சில இளைஞர்கள் தங்கள் நேசம் மற்றும் காதல் கதைகளை ஒருவருக்கொருவர் கூறிக்கொள்கின்றனர். சில போக்கிரியான வாலிபர்களின் சபையில் உனக்கு ஒரு பெண் தனியாக சிக்கினால் நீ என்ன செய்வாய் என்ற விவாதம் நடைபெறுகிறது. ஒவ்வொருவரும் முறை வாரியாக தங்களுடைய கீழ்த்தரமான சிந்தனைகளை வெளிப்படுத்திக் கொள்கின்றனர்.

அதுபோன்ற தருனத்தில் ஒவ்வொருவரின் உள்ளமும் ஏதோ ஒரு வகையில் விபச்சாரத்திற்கு துடித்துக் கொண்டிருந்ததாக பேசிக் கொள்கின்றனர். இப்படிப்பட்ட சபைகள் ஒருவருடைய இம்மை, மறுமை இரண்டையும் நாசமாக்கக்கூடியவையாகும். இது போன்ற சபைகளில் கலந்து கொள்வது இறை நிராகரிப்பாளர்களின் பட்டியலில் நம் பெயரை நாமாக எழுதிக் கொள்வது போன்றாகும்.

வாலிப பிள்ளைகள் வீட்டிற்கு வெளியே அதிக நேரங்கள் செலவிடக்கூடாது என்பதில் பெற்றோர்கள் கவனமாக இருக்க வேண்டும். தாய் தந்தையின் கண்காணிப்பு பிள்ளைகளை சைத்தான் மற்றும் சைத்தானைப் போன்ற மனிதர்களிடமிருந்து பாதுகாக்க அவசியமாக இருக்கிறது. வாலிபப் பிள்ளைகள் படிக்கச் சென்றால் வகுப்பு முடிந்தவுடன் சிறிது நேரம் கூட தாமதிக்காமல் வீட்டிற்கு வரும்படி பழக்கப்படுத்துங்கள்.

சற்று தாமதமானலும் ஏன்? என்ன காரணம் என்று தாய்மார்கள் கேள்விகளால் துளைத்தெடுக்க வேண்டும். தம் பிள்ளைகளுக்கு நண்பர்களை சந்திக்க அனுமதிப்பதற்குப் பதிலாக உன் நண்பனை பள்ளியிலேயே சந்தித்துப் பேச வேண்டியதை பேசிக் கொள்ளவும். இதற்காக வீட்டிற்கெல்லாம் செல்லக் கூடாது என்று வழிகாட்டவும்.

தாய் தந்தை பிள்ளைகளிடம் அவர்கள் தங்களுக்கு மத்தியில் சந்தித்துக் கொள்ளும் போது என்ன பேசுகிறார்கள் என்று கேட்டுக்கொண்டே இருங்கள். பொதுவாகவே பிள்ளைகள் மறைக்கத் தெரியாதவர்களாகவே இருப்பார்கள். ஓரிரு விஷயங்களை விசாரித்தாலே அனைத்து ரகசியங்களையும் வெளிப்படுத்திவிடுவார்கள். ஒருவேளை பொய் சொன்னாலும் விரைவில் சிக்கிக் கொள்வார்கள்.

அவ்வாறே பெண் பிள்ளைகள் அவர்களுடைய தோழிகளின் வீட்டிற்குச் செல்ல அனுமதி கேட்டால் ஒரு போதும் அனுமதிக்கக்கூடாது. பெரும்பாலும் தோழியின் வழியாகவே அவளுடைய சகோதரருடன் பழக்கம் ஏற்பட்டு நாளடைவில் தவறுக்குக் கூட வழிவகுத்து விடும். இறுதியாக பெற்றோர்களுக்கு எதுவும் தெரியாமலே எல்லாம் முடிந்துவிடும்.

## தீய பார்வை ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்களைத் தவிர்ந்து கொள்க:-

வாலிபர்கள் கடைத் தெருக்கள், சந்தைகள் வழியாக செல்லும் சந்தர்ப்பத்தில் குறிப்பாக தீய பார்வையை விட்டும் தற்காத்துக் கொள்ள வேண்டும். வியாபாரிகளாக உள்ளவர்கள் பெண்களிடம் கொடுக்கல் வாங்கல் செய்யும் சந்தர்ப்பம் ஏற்படும் போது மிகப் பேணுதலை கடைபிடிக்க வேண்டும். அல்லாஹ்வுடன் பரிவர்த்தனை செய்வது

போன்ற மனோநிலையில் வியாபாரத்தை மேற்கொள்ள வேண்டும்.

அருகில் கடந்து செல்லக்கூடிய பேருந்து அல்லது கார்களைப் பார்க்க வேண்டாம். ஏனெனில் ஜன்னல்களுக்கு அருகே பொதுவாக பர்தா அணியாத பெண்கள் அமர்ந்திருப்பார்கள். எனவே அவர்கள் மீது பார்வை பட்டுவிடும். செய்தித்தாள்கள் மற்றும் புத்தகங்களில் உள்ள பெண்களின் படத்தைப் பார்ப்பதும் இச்சை தூண்டப்படுவதற்கு காரணமாக அமையும். அவ்வாறே தாடியற்ற சிறுவர்களின் முகத்தையும் பார்க்க வேண்டாம். ஏனெனில் வாலிபனுடைய உதாரணம் பெட்ரோலைப் போன்றதும், தீய பார்வை நெருப்பைப் பற்ற வைப்பதைப் போன்றதுமாகும்.

### மண்ணறைக்குச் செல்லுங்கள்:-

பொதுவாக நகரங்களின் வனப்புகள், செழிசெழிப்புகள் மனிதனுக்கு அவனது இறுதி முடிவை மறக்கச் செய்கின்றன. மரணத்தை நினைவில் வைத்துக் கொள்ள எளிதான வழி என்னவென்றால், ஜனாஸாவை சுமந்து கப்ரஸ்தான் வரை செல்ல வேண்டும். பாழடைந்த இடிபாடுகளுடன் கூடிய மண்ணறைகளைப் பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும். எப்பேற்பட்ட அழகு சௌந்தர்யமிக்க முகங்கள் மண்ணில் போட்டு புதைக்கப்பட்டு விட்டன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

உலகின் மயக்க சூழலில் வாழக்கூடியவர்கள் மண்ணறையின் அமைதியான சூழலுக்கு சென்றால் இயல்பாகவே உணர்வு பெறுவார்கள். அங்கு சென்றால் இச்சையின் தீ அணைந்து விடும். மனதின் ஊசலாட்டங்கள் ஓய்வு பெறுகின்றன. வாழும் போது தங்களுடைய ஆடைகளில் சிறிய கரை கூட படிய விரும்பாதவர்களின் அழகிய

முகங்களும் இன்றைய தினம் மண்ணுக்குள் புதைக்கப் பட்டுள்ளன. இறந்தவரை மண்ணில் அடக்கம் செய்யும் நேரத்தில் உடனிருப்பதுமிகுந்த படிப்பினைக் கூரியதாகும்.

கூட்டங்களின் அலங்காரங்களாகத் திகழ்ந்தவர்கள் இன்று மண்ணறையில் அலங்கோலமாக மாறிக்கிடக்கின்றனர். ஒவ்வொரு சபையிலும் விளக்காக சுடர் விட்டுக் கொண்டிருந்தவர்கள் இன்று படிப்பினையூட்டும் சுவடாகக் காட்சியளிக்கின்றனர். மங்கையர்கள் புடை சூழ வாழ்ந்தவர்கள் இன்று தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

நமது முன்னோர்களில் ஒருவர் தன் வீட்டில் கப்ரு தோண்டி வைத்திருந்தார். தினமும் அதில் சில வினாடிகள் படுத்துக்கொண்டு, ஒரு நாள் நீ இந்த மண்ணறைக்குள் அடக்கப்படுவாய். எனவே அல்லாஹ்விற்கு மாறு செய்வதை அஞ்சிக் கொள் என்று தன்னைத் தான் முன்னோக்கி பேசிக் கொள்வார்.

ஒரு நபருக்கு மாரடைப்பு ஏற்பட்டு மரணமாகி விட்டார். அவருடைய வீட்டார்கள் அனைவரும் உறவினர் ஒருவரின் திருமணத்தில் கலந்துகொள்ள வெளியூர் சென்றிருந்தனர். இவர் மட்டும் வீட்டில் தனியாக இருந்தார். வீட்டில் யாரும் இல்லாத காரணத்தினால் மரணம் அடைந்த அவருடைய சடலம் ஒரு வார காலம் அப்படியே கிடந்தது. ஒரு வாரம் கழித்து அவருடைய வீட்டார்கள் வந்து பார்த்தபோது வீடு முழுக்க துர்வாடையும், நாற்றமும் நிரம்பி இருந்தது.

எனவே வீட்டிற்குள் செல்ல எவரும் தயாராகவில்லை. ஒரு நபர் மட்டும் தன்னுடைய முகத்தில் துணியை கட்டிக்கொண்டு உள்ளே நுழைந்தார். இறந்த அந்த நபருடைய உடலில் புழுக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன். அவருடைய இரண்டு கண்களும் கண்குழியிலிருந்து

வெளிப்பட்டு கன்னத்தில் தொங்கிக் கொண்டிருந்தன. அவருடைய உதடு உடலில் இருந்து தனியாகி தொங்கிக் கொண்டிருந்தது.

இறந்த ஆட்டின் பற்கள் தெரிவது போன்று அவருடைய பற்கள் தெரிந்து கொண்டிருந்தன. வயிறு பள்ளமாகி புழுக்களால் நிரம்பி காட்சியளித்தது. மூக்கில் இருந்து திரவங்கள் வெளிப்பட்டு இரு காதுகள் வரை வடிந்திருந்தன. இக் காட்சியைப் பார்த்த நபரின் சிந்தனையில் இது ஆழமாக பதிந்து விட்டது.

ஏறத்தாழ ஒரு மாத காலம் அவரால் உண்ணவோ, உறங்கவோ முடியவில்லை. மக்களோடு கலந்துறவாட அவருடைய மனம் நாடவில்லை. நான் உலகத்துடைய உண்மை நிலையை என் கண்ணால் கண்டு கொண்டேன் என்று கூறிக் கொண்டே எல்லோரையும் விட்டு ஒதுங்கி இருந்தார்.

எனவே தான் வாலிபர்களுக்கு எப்போதாவது இச்சை மேலிட்டு, பாவம் செய்வதற்கு அவரை நிர்பந்திக்குமானால் கப்ருடைய காட்சியை நினைத்துப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

اَكْثَرُوْا ذِكْرَ هَاذِمِ اللَّذَّاتِ يَعْنِيْ اَلْمَوْتُ

மகிழ்ச்சியை முறிக்கும் விஷயமான மரணத்தை அடிக்கடி நினைவுபடுத்துங்கள் என்று நபி ﷺ அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

நமக்கு உண்மை நிலைகளை அறிவுறுத்தி சத்திய பாதையின் பால் வழிகாட்டிய, உலகத்துடைய தற்காலிக சந்தோஷங்களை விட்டும் மறுமையுடைய நிரந்தரமான வாழ்வை பெறுவதற்கு வழிகாட்டிய எமது தலைவர் நபி ﷺ அவர்களுக்கு சிறந்த கூலியை நம் புறத்திலிருந்து அல்லாஹ் வழங்குவானாக!

## எரியும் நெருப்பு ஜுவாலையைப் பார்த்து படிப்பினை பெறுதல்:-

வாலிபர்கள் எரியும் நெருப்பு ஜுவாலையைப் பார்த்து படிப்பினை பெற வேண்டும். சில சமயங்களில் அதில் இறைச்சி துண்டைப் போட்டுப் பாருங்கள். நெருப்பு அதை எப்படி எரித்து கரிக்கட்டையாக ஆக்கிவிடுகின்றது என்று சிந்தியுங்கள். இதன் காரணமாகவே நம் முன்னோர்கள் கொல்லனுடைய உலையில் பற்றி எரியும் நெருப்பைப் பார்த்தால் மயங்கி விழக்கூடியவர்களாக இருந்தார்கள்.

ராபியா பசரியா ﵀ அவர்களுக்கு முன்னால் ஒரு நபர் கோழி இறைச்சியைக் கொண்டு வந்து வைத்தார். அதைப் பார்த்த அவர்கள் அழ ஆரம்பித்து விட்டார்கள். ஏன் அழுகிறீர் என்று பணிவிடையாளர் கேட்ட போது, இந்த கோழி என்னை விட மேலானதாகும். ஏனெனில் அதை நெருப்பில் போட்டு பெசுாக்குவதற்கு முன்பாக அறுக்கப்பட்டு அதன் உயிர் வெளியாக்கப்பட்டுவிட்டது. பிறகுதான் அது பெசுாக்கப்பட்டது. ஆனால் இந்த ராபியா கியாமத்துடைய நாளில் ஒருவேளை மன்னிக்கப் படவில்லையானால் உயிரோடு நரக நெருப்பில் போட்டு பொசுக்கப்படுவாளே! என்று கூறினார்கள்.

اَمَنْ يَّلْقَي فِيْ النَّارِ خَيْرٌ اَمَنْ يَأْتِيْ اَمِنًا يَوْمَ الْقِيَامَةِ اِعْمَلُوْا مَا شِئْتُمْ اِنَّهُ بِمَا تَعْلَمُوْنَ بَصِيْرٌ

**நரக நெருப்பில் தூக்கி எறியப்படக்கூடியவர் சிறந்தவரா அல்லது மறுமை நாளில் அனைத்து வித அபாயங்களிலிருந்தும் நிம்மதி பெற்றவர் சிறந்தவரா? எனவே நீங்கள் விரும்பியதைச் செய்து கொள்ளுங்கள். உங்களுடைய செயல்களை அவன் பார்க்க கூடியவனாக இருக்கிறான்.**

எரியக்கூடிய நெருப்பைப் பார்த்து இந்த ஆயத்தின் கருத்தை மனதில் நிறுத்தி பலமுறை சிந்தித்துப் பாருங்கள் இச்சையை கட்டுப்படுத்துவது இலகுவாகிவிடும்.இதன் பிறகும் இச்சை உணர்வு கட்டுக்குள் வரவில்லையானால் உங்களுடைய விரலை நெருப்புக்கு அருகில் வைத்துப் பாருங்கள்.

அல்லாஹ் கூறியுள்ளான்:

اَفَرَأَيْتَ النَّارَ الَّتِيْ تَوْرَوْنَ أَنْتُمْ اَنْشَأْتُمْ شَجَرَتَهَا اَمْ نَحْنُ الْمُنْشِيُّوْنَ نَحْنُ جَعَلْنَاهَا تَذْكِرَةً وَّ مَتَاعًا لِلْمُقَوِّيْنَ

**நீங்கள் பற்றவைக்கும் நெருப்பைப் பார்த்தீர்களா? அவை பிடித்தெறியும் மரத்தை நீங்கள் உருவாக்கினீர்களா அல்லது நாம் உருவாக்கினோமா?. நாமே அதை படிப்பினையாக பயணிகளுக்கு பலன் தரும் சாதனமாகவும் ஆக்கி உள்ளோம்.**

மற்றுமொரு இடத்தில் அல்லாஹ் கூறுகிறான்:

وَ اتَّقُوْا النَّارَ الَّتِيْ وُقُوْدُهَا النَّاسَ وَ الْحِجَارَةَ

**எந்த நெருப்பின் எரிகொல்லிகளாக மக்களும், கற்களும் இருப்பார்களோ அந்த நெருப்பை பயந்து கொள்ளுங்கள்.**

மற்றுமொரு இடத்தில் அல்லாஹ் கூறியுள்ளான்.

اَلنَّارُ يَعْرِضُوْنَ عَلَيْهَا غَدُوًا وَ عَشِيًّا

**காலையும், மாலையும் நெருப்பில் அவர்கள் கிடத்தப்படுவார்கள்.**

மற்றுமொரு இடத்தில் அல்லாஹ் கூறியுள்ளான்.

اِنَّ لَدَيْنَا اِنْكَالًا وَّ جَحِيْمًا وَّ طَعَامًا ذَا غُصَّةٍ وَّ عَذَاباً اَلِيْمًا

**நிச்சயமாக, நம்மிடம் அரிகண்டங்களும், மற்றும் கொழுந்துவிட்டெரியும் நெருப்பும், தொண்டையில் சிக்கக் கூடிய உணவும் மற்றும் வலிமிகுந்த தண்டனைகளும் உள்ளன.**

இன்னொருமிடத்தில் அல்லாஹ் கூறியுள்ளான்.

نَارُ اللّٰهِ الْمُوْقَدَةِ الَّتِيْ تَطْلَعُ عَلَي الْاَفْئِدَةِ

**அது அல்லாஹ்வினால் மூட்டப்பட்ட நெருப்பாகும். இதயங்கள் வரை சென்றடையக் கூடியதாகும்.**

மற்றும் வருடத்தில் அல்லாஹ் கூறியுள்ளான்.

سَمِعُوْا لَهَا تَغِيْظًا وَّ زَفِيْرًا

**அந்த நரகத்திற்கென்று பெருமூச்சு ஓசையையும், ஆக்ரோசமான சப்தத்தையும் செவியுறுவார்கள்.**

**எழுப்பப்படும் நாளில் ஏற்படும் அவமானங்கள்:-**

மஹ்ஷர் மைதானத்தில் ஒன்று திரட்டப்படும் காட்சியை நினைவு கூறவேண்டும். அந்த நாளின் அவமானம் மிகப் பெரியதாகவும், மிகக் கெட்டதாகவும் இருக்கும். இரு நபர்களுக்கு முன்னால் சிறிய அவமானத்தைக் கூட பொறுத்துக்கொள்ள முடியாதவர், அனைத்து படைப்பினங்களுக்கும் முன்னால் எப்படி மாபெரும் அவமானத்தை தாங்கிக் கொள்வார்?

يَوْمَ تُبْلَي السَّرَائِرَ

உள்ளத்தில் புதைந்துள்ள ரகசியங்கள் திறக்கப்படும் நாள் என்பதாக அந்த நாளைப் பற்றி அல்லாஹ் கூறியுள்ளான்.

மறைந்திருக்கும் ரகசியங்களை அல்லாஹ் வெளிப்படுத்தும் போது நம்முடைய கேவலம் மற்றும் இழிவில் எந்த குறைவும் ஏற்பட வாய்ப்பில்லை. தாய் தந்தைக்கு முன்னால் பிள்ளைகள் அவமானப்படும் நிலை ஏற்படும். கணவனுக்கு முன்னால் மனைவியும், தந்தைக்கு முன்னால் மகளும், மேலும் மகனுக்கு முன்னால் தாயும் அவமானப்படக்கூடிய நிலை ஏற்படும்.

இவற்றைப் பார்க்கக்கூடிய மக்கள் எங்களுக்குக் முன்னால் எப்படியெல்லாம் நல்லவர் போன்று நடித்துக் கொண்டிருந்தார், தனிமையில் இவ்வளவு மோசமானவராக இருந்துள்ளாரே என்று பேசுவார்கள். மறுமை நாளில் வெட்கம் மேலும் இழிவின் காரணமாக பாவிகள் அல்லாஹ்வுக்கு முன்பாக தன் தலையைக்கூட உயர்த்த மாட்டார்கள்.

அல்லாஹ் கூறியுள்ளான்:

وَ لَوْ تَرَي اِذَ الْمُجْرِمُوْنَ نَاكِسُوْا رُؤُوْسَهُمْ عِنْدَ رَبِّهِمْ

**ஒரு பாவி தன் இறைவன் முன்பாக தலை குனிந்து நிற்கக்கூடிய நிலையில் நீங்கள் பார்த்தால்**

மற்றுமொரு இடத்தில்

خَاشِعِيْنَ مِنَ الذِّلِّ

**அவர்களுடைய பார்வைகள் இழிவினால் கீழ்நோக்கி இருக்கும்** என்றும் கூறியுள்ளான்.

அன்றைய தினம் ஒரு நபர் தன்னை மறைத்து ஒளிந்து கொள்ளும் எந்த இடத்தையும் பெற மாட்டார்.

அல்லாஹ் கூறுகிறான்:

يَقُوْلُ الْاِنْسَانُ يَوْمَئِذٍ اَيْنَ الْمُفَرُّ

**அன்றைய தினம் எங்கே தப்பிச் செல்வது என்பதாக மனிதன் கேட்பான்.**

ஹதீஸில் வந்துள்ளது உலகில் யார் தன் கைகளின் மூலமாக இச்சையை பூர்த்தி செய்தார்களோ மறுமை நாளில் அவர்களுடைய கை கர்ப்பமுற்ற பெண்ணுடைய வயிற்றைப் போன்று பெரிதானதாக எழுப்பப்படுவார்கள். வாலிபர்கள் கியாமத்துடைய இந்த காட்சியை மீண்டும் மீண்டும் சிந்தித்துப் பார்த்து அல்லாஹ்வுடைய அச்சதை மனதில் கொண்டு வந்து பாவங்களை விட்டும் விலகி இருக்க முயற்சி செய்ய வேண்டும்.

## அல்லாஹ் என்னுடன் இருக்கின்றான் என்று கவனத்தில் கொண்டு வருதல்

வாலிபர்கள் எந்நேரமும் அல்லாஹ்வுடைய உடன் இருப்பை பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அல்லாஹ் கூறியுள்ளான்:

وَ هُوَ مَعَكُمْ اَيْنَمَا كُنْتُمْ

**நீங்கள் எங்கிருந்தாலும் சரி அவன் உங்களோடு இருக்கிறான்.**

அல்லாஹ் மற்றுமொரு ஆயத்தில் கூறுகிறான்.

وَ نَحْنُ اَقْرَبُ اِلَيْهِ مِنْ حَبْلِ الْوَرِيْدِ

**நாம் உங்களுடைய பிடரி நரம்பை விட மிக நெருக்கமாக, உங்களுக்கு மிக சமீபமாக இருக்கிறோம்.**

நாம் எந்த வேலை செய்தாலும் அல்லாஹ் நம்மை

பார்த்துக் கொண்டிருக்கிறான். நாம் பேசும் சந்தர்ப்பத்தில் அனைத்தையும் அவன் கேட்டுக் கொண்டிருக்கிறான்.

அல்லாஹ் கூறுகிறான்:

اَسْمَعُ وَ اَرَي

**நான் கேட்கிறேன். மேலும் நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.**

நம்முடைய நெருக்கமான ஒரு நபர் நாம் அருவருக்கத்தக்க காரியங்களை செய்யும்போது பார்த்து விடுவாரேயானால் நமக்கு எவ்வளவு வருத்தமும், குற்ற உணர்வும் ஏற்படுகிறது. ஏதேனும் ஒரு பெண்ணுடைய சகோதரர்களோ அல்லது கணவரோ அவள் தவறு செய்ய ஆயத்தமாகும் போது அவளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அவள் எண்ணினால் அந்த தவறின் பால் ஏறெடுத்தும் பார்க்க மாட்டாள். ஆனால் நாம் செய்பவை அனைத்தையும் அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற எண்ணம் இல்லாததால் நமக்கு பாவம் பற்றிய எந்த அச்சமும் ஏற்படுவதில்லை.

ஒரு மகான் கூறுவார்கள்; அல்லாஹ் என்னுடைய உள்ளத்தில் உதிப்பை ஏற்படுத்தினான். என் அடியார்களிடம் சொல்லி விடுங்கள் நீங்கள் பாவம் செய்யும் போது மக்கள் பார்க்கக்கூடிய அனைத்து கதவுகளையும், ஜன்னல்களையும் அடைத்து விடுகிறீர்கள். ஆனால் அல்லாஹ்வான நான் பார்க்கக்கூடிய கதவை உங்களால் அடைக்க முடியுமா?

நான் பார்க்கக் கூடிய அந்த ஜன்னலை நீங்கள் திறந்தவாறு விட்டுவிடுகிறீர்களே! பார்ப்பவர்களில் என்னை மிகத் தரம் குறைந்தவனாக கணக்கிட்டு விட்டீர்களா?

அல்லாஹ் கூறுகிறான்:

اَلَمْ يَعْلَمْ بِاَنَّ اللّٰهَ يَرَي

**அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதை அவன் அறியவில்லையா !**

மற்றுமொரு இடத்தில் கூறுகிறான்:

يَعْلَمْ خَائِنَةَ الْاَعْيُنِ وَ مَا تُخْفَي الصُّدُوْرُ

**அவன் உள்ளத்தின் மறைத்து வைப்பவைகளையும், கண்ணுடைய துரோகத்தையும் அறியக்கூடியவனாக இருக்கிறான்.**

இதே கருத்தை ஒரு இறைநேசர் தன்னுடைய அற்புதமான வார்த்தைகளில் வடித்துக் கூறியுள்ளார்கள்.

கண் செய்யும் துரோகங்கள், மனதில் புதைந்திருக்கும் ரகசியங்கள்

அனைத்தையும் அறிந்துள்ளாய், அனைத்தின் பால் தேவையற்றவனே!

**சூழலை மாற்றவும்:-**

விபச்சாரத்திற்கு தூண்டக்கூடிய காரணங்கள் ஒருங்கிணைந்திருக்கும் இடத்தை விட்டு வெளியேறி அச் சூழலை மாற்றுவது மிகவும் அவசியமானதாகும். ஹஜ்ரத் யூசுஃப் ﵇ அவர்களை, எகிப்துடைய பெண்கள் பாவத்தின் பால் அழைத்த போது, அவர்கள் அழைக்கும் தவறில் ஈடுபடுவதை விட இந்த சிறைவாசம் எனக்கு விருப்பமானது என்று பிரார்த்தனை செய்தார்கள்.

رَبُّ السِّجْنِ اَحَبُ اِلَيِ مِمَّا يَدْعُوْنَنِيْ اِلَيْهِ

அவ்வாறே இஸ்ரவேலர்களில் நூறு பேரைக் கொன்றவர் மனம் வருந்தி பாவ மன்னிப்புத் தேடிய போது, அவர் வசித்து வந்த தனது நகரத்தை விட்டு வெளியேறி, நல்லவர்கள் வாழ்கின்ற ஊருக்குச் செல்ல உத்தரவிடப்பட்டார். வேறு வார்த்தையில் கூறுவதானால் அவருடைய சூழலை மாற்ற உத்தரவிடப்பட்டது. எனவே பாவம் நிறைந்த சூழலை விட்டுவிட்டு, நன்மையின் சூழலை நாடிச் செல்வது அவசியமாகும்.

ஏதேனும் ஒரு இடத்தில் உள்ள புகைப்படத்தைப் பார்ப்பதின் மூலம் இச்சையுணர்வு ஏற்படும் என்றிருந்தால் அவ்விடத்தை விட்டு உடனடியாக நகர்ந்து விட வேண்டும். அவ்வாறே எங்காவது அமர்ந்திருக்கும் ஒரு நபரைப் பார்ப்பதால் அல்லது அவரோடு பேசுவதால் இச்சையுணர்வு மேலோங்குமானால் அல்லது அவர் தரப்பிலிருந்து தவறுக்கான தூண்டல் ஏற்படும் என்றிருந்தால் அந்த இடத்தை விட்டும் நகர்வது கட்டாயமாகும். அவ்வாறே ஏதேனுமொரு அறையில் தொலைக்காட்சி ஓடிக் கொண்டிருந்தால் அதை நிறுத்துவதற்கு உங்களுக்கு ஆற்றல் இல்லையெனில் அந்த இடத்தை விட்டு எழுந்து வெளியேறுதல் அவசியமாகும்.

**மறைமுகமான நோய்கள்:-**

கரங்களின் மூலமாக அல்லது ஏதேனுமொரு பெண்ணோடு விபச்சாரம் செய்வதின் மூலமாக அல்லது வேறு தவறான செயலின் மூலமாக இச்சையை பூர்த்தி செய்வதினால் மனித உடலில் ஆபத்தான பல நோய்கள் ஏற்படுகின்றன. சில சமயங்களில் அவைகளுக்கு

பகிரங்கமாக சிகிச்சை செய்வது கூட இழிவாகக் கருதப்படும். இன்னும் சில சமயங்களில் வாலிபர்கள் இதனால் தன் மனைவியோடு உடலுறவு கொள்ளக் கூட இயலாத அளவு உடல் பலவீனமானவர்களாக மாறிவிடுகின்றனர்.

இதனால் அவர்களுடைய வாழ்வு வீணாகுவதோடு மட்டுமல்லாமல் அவனுடைய வாழ்க்கைத் துணையாக வந்த அந்தப் பெண்ணுடைய வாழ்வும் நாசமாகி விடுகிறது. சில நேரங்களில் இது விவாகரத்து வரை சென்று முடிவடைந்து விடுகிறது. இதனால் ஒன்றிணைந்திருந்த இரு குடும்பம் பிரிந்து விடுகின்றது. எனவே வாலிபர்கள் தன்னுடைய ஆசையை தவறான வழியில், தவறான இடத்தில் பூர்த்தி செய்தால் நிச்சயம் கேவலத்தை எதிர்கொள்ள வேண்டி வரும் என்ற விஷயத்தை தன்னுடைய ஆழ் மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

## விபச்சாரம் ஒரு அடியான் மீது கடனாக கருதப்படும்:-

எப்போதாவது விபச்சாரம் செய்வதற்கு உடல் துடித்துக் கொண்டிருக்குமானால் இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த விபச்சாரம் பெரும் பாவமாக இருப்பதால் அல்லாஹ்வுடைய கோபத்திற்கான காரணமாகும். இரண்டாவது இது அடியான் மீது கடனாக விதிக்கப்பட்டு விடும். அந்தக் கடனை அவருடைய குடும்பத்தை சார்ந்த ஏதேனுமொரு பெண் அவசியம் நிறைவேற்ற வேண்டிவரும். அது அவனுடைய மகளாக, மனைவியாக சகோதரியாக இருக்கலாம். சந்தோசமாகவோ அல்லது வேண்டா வெறுப்பாகவோ ஆனால் அக் கடனைக் அடைத்தே தீர வேண்டும்.

இன்று நான் ஏதேனும் ஒரு பெண்ணோடு விபச்சாரம் செய்வேனேயானால் நாளை என்னுடன் சம்பந்தப்பட்ட ஒரு பெண்ணோடு விபச்சாரம் செய்யப்படும் என்று எண்ணி அஞ்ச வேண்டும்.

நபி ﷺ கூறினார்கள்: நீங்கள் பிற அன்னிய பெண்களிடம் பேணுதலாக நடந்து கொண்டால் மக்கள் உங்களுடைய பெண்கள் விஷயத்திலும் பேணுதலாக இருப்பார்கள்.

ஏனெனில் செயல்களுக்கு உடனுக்குடன் கூலி முடிவாக்கப்படும். மனிதன் எதை பூமியில் விதைப்பானோ அதையே அறுவடை செய்வான். நீங்கள் என்ன விதைப்பீர்களோ அதையே அறுவடை செய்வீர்கள் என்ற சிந்தனையை அடிக்கடி மனதில் கொண்டு வந்தால் மனதில் கொழுந்து விட்டு எரியும் காமத்தீயைக் கட்டுப்படுத்துவது இலகுவாகி விடும். இதனால் இந்நோயிலிருந்து பரிபூரண நிவாரணம் கிடைத்து விடும்.

## விபச்சாரம் செய்பவன் சைத்தானின் நண்பன்:-

அல்லாஹ் கூறியுள்ளான்:

اَلَمْ اَعْهَدْ اِلَيْكُمْ يَا بَنِيْ اٰدَمَ اَلَّا تَعْبُدُوْا الشَّيْطَانَ اَنَّهُ لَكُمْ عَدُوٌّ مُبِيْنٌ وَاِنْ اَعْبُدُوْنِيْ هَذَا صِرَاطٌ مُسْتَقِيْمٌ وَلَقَدْ اَضَلَّ مِنْكُمْ جِبَلًا كَثِيْرًا اَفَلَمْ تَكُوْنُوْا تَعْقِلُوْنَ

**ஆதமின் பிள்ளைகளே, நான் உங்களிடம் சொல்ல வில்லையா, நீங்கள் சைத்தானை வணங்காதீர். மேலும் என்னையே வழிபாடு செய்யுங்கள். இதுவே நேரான வழியாகும். உங்களில் பலரை அவன் வழிகெடுத்துவிட்டான். பிறகும் நீங்கள் விளங்கமாட்டீர்களா?**

**இறையச்சத்தால் ஒரு நபர் அல்லாஹ்வுடைய நண்பனாக ஆகுவதைப் போல் விபச்சாரம் செய்வதால் சைத்தானுடைய தோழனாக ஆகிவிடுகிறார். எனவே நாளை மறுமை நாளில் ரஹ்மானுடைய அடியார்களில் ஒருவராக நான் ஆகுவதற்கு விபச்சாரத்திலிருந்து விலகியிருக்க வேண்டும். அல்லாஹ் தன்னுடைய சந்நிதானத்திலிருந்து துரத்தி விடும் நபர்களில் ஒருவராக நான் ஆகிவிடக் கூடாது என்ற கருத்தை வாலிபர்கள் தமது சிந்தனையில் பதிய வைக்க வேண்டும்.**

اَفَتَتَّخِذُوْنَهُ وَذُرِّيَتَهُ اَوْلِيَائَهَ مِنْ دُوْنِيْ وَهُمْ لَكُمْ عَدُوٌّ بِئْسَ بِالظَّالِمِيْنَ بَدْلًا

**அல்லாஹ்வின் அறிவுரை நீங்கள் அவனையும், அவனுடைய பிள்ளைகளையும் நண்பர்களாக ஆக்குகிறீர்களா? அவனோ உங்களுடைய விரோதியாக இருக்கிறான். அநியாயக்காரர்களுக்கு மோசமான பகரம் உள்ளது.**

நாளை மறுமை நாளில் விபச்சாரம் செய்தவனை பார்த்து நீ என்னை விட்டு விட்டு சைத்தானைப் பின்பற்றினாய். எனவே அவனோடு சேர்ந்து நரகத்தில் நுழைந்து கொள் என்று கூறப்பட்டால் விளைவு என்னவாகும். இந்த ஆயத்தின் அர்த்தங்களை சிந்தித்து அதிகமதிகம் அதை ஓதி வருவதன் மூலமும் இச்சையின் வேகம் குறைய வாய்ப்பிருக்கிறது.

## உங்கள் ஒதுக்கீடு முடிவடைந்து விடும்:-

அல்லாஹ் மனிதனுடைய அனைத்து தேவைகளையும் துல்லியமாக முடிவு செய்துள்ளான்.

அல்லாஹ்வின் கூறுகிறான்:

وَاِنَّ مِنْ شَيْءٍ اِلَّا عِنْدَنَا خَزَائِنَهُ وَ مَا نَنْزَلْهُ اِلَّا بِقَدْرٍ مَعْلُوْمٍ

**மேலும் எல்லாவற்றின் கருவூலமும் எங்களிடம் உள்ளது. நாங்கள் அதை ஒரு குறிப்பிட்ட முறையில் இறக்குகிறோம்.**

ஒவ்வொருவிஷயத்திலும் ஒரு அளவு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. மனிதன் உலகில் எத்தனை நாட்கள் வாழ்வான். எவ்வளவு சுவாசிப்பான்? அல்லது எத்தனை முறை இச்சையைப் பூர்த்தி செய்வான்? என்பது போன்ற அனைத்தும் முடிவு செய்யப்பட்டுள்ளன.

ஒரு நபரின் வாழ்க்கை 65 ஆண்டுகள் என்று வைத்துக் கொள்வோம். பருவ வயதை அடைவதற்கு முந்தைய 15 ஆண்டுகளைக் கழித்து மீதமுள்ள 50 ஆண்டுகளில் அவர் ஆறாயிரம் தடவைகள் உடலுறவின் இன்பத்தை பெறுவார் என்று முடிவு செய்யப்பட்டிருந்தால் அந்த வாலிபர் பரிசுத்தமான,பத்தினித்தனமாக வாழ்வைக் கழிக்க கூடியவராக இருந்தால் இந்த இன்பத்தை தன்னுடைய மனைவியோடு உறவு கொள்வதின் வாயிலாக ஹலாலாக பூர்த்தி செய்து கொள்வார்.

ஆனால் இச்சையில் உந்தப்பட்டு தன் கரங்களின் மூலமாகவோ அல்லது விபச்சாரத்தின் மூலமாகவோ ஆசையை பூர்த்தி செய்வாரேயானால் தன்னுடைய கோட்டாவை குறைத்துக் கொள்கிறார். எனவே எந்த வாலிபர் கையினால் இந்திரியத்தை வெளியாக்குவாரோ, அவ்வாறே எந்த வாலிபப் பெண் விரலை நுழைப்பதினால் இன்பம் பெறுவாளோ அவர்களுடைய திருமண

வாழ்வினால் கிடைக்கக்கூடிய இன்பம் பூர்த்தியற்றதாகவோ அல்லது முழுமையற்றதாகவோ ஆகிவிடும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை..

அவ்வாறே ஒரு வாலிபப் பெண் திருமணத்திற்கு முன்பாக தன்னுடைய கோட்டாவை வீணாக்கி விடுவாளேயானால் அவளுடைய கணவன் மூலமாக கிடைக்க வேண்டிய இன்பம் தவறிவிடும். அவன் அவளோடு இருக்கும் போதே வேறொரு பெண்ணை திருமணம் முடித்துக் கொண்டு தன்னுடைய கணக்கை பூர்த்தி செய்து கொள்வான். ஒருக்கால் வேறு திருமணம் செய்ய வில்லையானாலும் விபச்சாரத்தின் மூலமாக தன்னுடைய மாற்றுப் பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொள்வான்.

அவ்வாறே திருமணத்திற்கு முன்பாக தன் கணக்கை வீணாக்கிக் கொள்ளக்கூடிய வாலிபரின் மனைவி ரகசியமாக கள்ளத் தொடர்பின் மூலமாக தன் மனம் விரும்பிய வாழ்க்கையை அனுபவிக்க ஆரம்பித்து தன் கணக்கை பூர்த்தி செய்து கொள்வாள். எனவே தவறான வழிகளில் இச்சையைப் பூர்த்தி செய்யக்கூடிய நபர்கள் தனக்குத்தானே நஷ்டத்தை விளைவித்துக் கொள்கிறார்கள். சற்று சகிப்புத்தன்மையுடன், மனதைக் கட்டுப்படுத்தி இருந்தால் ஹராமிற்கு பதிலாக ஹலாலான வழிகளிலேயே அனைத்து இன்பமும் கிடைத்துவிடும்.

கணவன், மனைவிக்கு மத்தியில் அன்பும், நேசமும் நிரம்பிய வாழ்வு அமையும். ஒருவர் மற்றவருக்காக உயிரையே அர்ப்பணிப்பார்கள். மக்களால் முன்னுதாரணமான தம்பதி என்று புகழப்படுவார்கள். அந்த ஆண் முன்னுதாரணமான கணவன் என்பதாகவும், அந்த பெண் முன்னுதாரணமான மனைவி என்பதாகவும் அழைக்கப்படுவார்கள்.

நிச்சயமாக ஒவ்வொருவருக்கும் அவரவருடைய பங்கு கிடைத்தே தீரும். எனவே பொறுமையிழந்து அவசரப்பட்டால் அது ஹராமான காரியமாக ஆகிவிடும். ஆனால் சற்று சகித்துக் கொண்டால் அதுவே ஹலாலானதாக கிடைத்து விடும். எனவே வாலிபர்கள் இக்கருத்தை கவனுத்துடன் சிந்தித்தால் இச்சையை கட்டுப்படுத்தி, அவர்களுடைய மர்ம ஸ்தானத்தை பாதுகாப்பது இலகுவாகிவிடும்.

## இச்சையைக் கட்டுப்படுத்த மருத்துவ சிகிச்சை

ஏதாவதொரு வாலிபர் தன்னுடைய தவறான பழக்க வழக்கத்தின் காரணமாக பாலியல் ரீதியாக பலவீனமாகி விட்டாலோ, அல்லது அவருடைய சுபாவம் இலேசான பேச்சின் மூலமே இச்சை உணர்வு பொங்கி எழும் விதத்தில் ஆகிவிட்டாலோ, அவருடைய ஆண்குறி எந்நேரமும் விரைத்து நிற்குமாறு இருந்தாலோ, அல்லது அவருடைய சிந்தனையில் சைத்தானுடைய ஆபாச எண்ணங்கள் எப்போதும் பதிந்து காணப்பட்டாலோ, அதனால் அவருக்கு இந்திரியம் மிகுதியாக வெளிப்பட்டாலோ உடனடியாக இதுபோன்று நோய்களுக்கு சிகிச்சை பெறுவதற்காக ஏதேனும் ஒரு மார்க்கப்பற்றுள்ள வைத்தியரை அல்லது பால்வினை நோய் பற்றிய மருத்துவரை அணுக வேண்டும்.

இதில் தாமதம் செய்தால் மிகப் பெரும் பாதிப்பு ஏற்படும். வாலிப பெண்கள் லொகோரியா போன்ற நோயில் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கும் உடனடியாக மருத்துவம் செய்ய வேண்டும். அல்லாஹ் எந்த நோயை இறக்கினாலும் அதற்கான மருந்தையும் சேர்த்தே இறக்கியுள்ளான் என்பதாக ஒரு ஹதீஸில் வந்திருக்கிறது.

அல்லாஹ் குர்ஆனிலே விபச்சாரத்தை பற்றி கூறும் போது விபச்சாரம் செய்யக்கூடிய பெண்கள் மற்றும் ஆண்கள் என்று பெண்ணை முற்படுத்தியும் ஆணை பிற்படுத்தியும் கூறியுள்ளான். குர்ஆன் விரிவுரையாளர்கள் இவ்வாறான வாக்கிய அமைப்பிற்கு விளக்கம் கூறும் போது விபச்சாரத்தின் தொடக்கம் பெரும்பாலும் பெண்ணின் புறத்திலிருந்தே ஏற்படும். உதாரணமாக ஒரு பெண் பர்தா மூலம் தன்னை மறைத்துக் கொள்வதில் பேணுதலற்று இருந்தால் அவளைக் காணக்கூடிய ஒரு ஆணுக்கு அடுத்த கட்ட வாய்ப்பு உருவாகிவிடுகிறது என்று கூறியுள்ளார்கள்.

அவ்வாறே ஒரு பெண் அந்நிய ஆணிடம் கவர்ச்சியாகப் பேசுவாளேயானால் தவறுக்கான அடுத்த கட்ட வாய்ப்பு உருவாகிவிடுகிறது. அவ்வாறே ஒரு பெண் மஹ்ரமல்லாத நபருடன் சேர்ந்து வெளியே சுற்றிக் கொண்டிருந்தால் அவளுடன் பலவந்தமாக விபச்சாரம் செய்யும் வாய்ப்பை அவனுக்கு உருவாக்கித் தருகிறாள் என்று அர்த்தமாகும். ஒரு ஆணுடைய எண்ணம் தவறாகிவிட்டது என்பதை அறிந்த பின்பும் ஒரு பெண் தன் குடும்பத்தார்களுக்கு அதை தெரிவிக்கவில்லையானால் அவளை வழிகெடுக்கும் சந்தர்ப்பம் அவனுக்கு கிடைத்து விடுகிறது.

ஒரு பெண் ஒரு ஆணுடைய கடிதத்தை படித்த பிறகு அல்லது போனில் அவனுடைய குரலை கேட்ட பிறகு அல்லது அவனுடைய குறுந்தகவல் கிடைத்த பிறகு உடனடியாக கடினமான நடவடிக்கை மேற்கொள்ளவில்லையானால் இவை அனைத்தின் இறுதி விளைவும் விபச்சாரம் வரை சென்றடையும்.

ஆக ஒரு பெண் விபச்சாரத்திற்குத் தயாராகாத வரை எந்த ஒரு ஆணும் அவளுடன் தவறான உறவு கொள்வதில்

தோல்வியுற்றவனே. எனவே தான் குர்ஆனும் விபச்சாரத்தைப் பற்றிக் கூறும் போது பெண்ணை முதல் குற்றவாளியாக முன்னிறுத்துகிறது. எனவே ஒரு பெண் தன்னுடைய மானம், மற்றும் கற்பைப் பாதுகாப்பதில் எந்த குறையும் வைக்காமல் இருக்க வேண்டும்.

போர்க்களத்தில் அநீதத்திற்கெதிராக யுத்தம் செய்யும் ஆணுக்கு கிடைக்கக்கூடிய சிறப்புகள் தன்னுடைய வீட்டின் நான்கு சுவர்களுக்கு மத்தியிலிருந்து கொண்டு சிரமத்தை சகித்து முஜாஹதா செய்து பரிசுத்தமான வாழ்வு வாழக்கூடிய பெண்ணிற்கும் கிடைக்கும். இதன் காரணமாகவே மறுமை நாளின் திடுக்கங்களுக்கு மத்தியில் அர்ஷுடைய நிழலில் அமர்ந்திருக்க அவளுக்கு இடமும் கிடைக்கும் என்பதாக ஹதீஸ்களில் வந்துள்ளது.

பின் வரக்கூடிய விஷயங்களில் ஆண்கள் மற்றும் பெண்களுடைய ஜிஹாதிற்கு மத்தியிலுள்ள ஒப்பீடு முன்வைக்கப்பட்டுள்ளது.

- நபி ﷺ அவர்கள் ஆண்கள் ஜிஹாதில் கலந்து கொள்வதற்கு பைஅத் ரிழ்வான் என்ற ஒப்பந்தம் வாங்கினார்கள். /
- நபி ﷺ அவர்கள் பெண்கள் வெட்கம், மானத்துடன் கற்பை பாதுகாத்து வாழ்வதற்கு ஒப்பந்தம் வாங்கினார்கள்.
- ஒரு போராளியின் யுத்தம் வீட்டிற்கு வெளியே மைதானத்தில் நடைபெறுகிறது. /
- ஒரு பெண்ணுடைய யுத்தம் வீட்டுக்குள் இருந்தவாறே நடைபெறுகிறது.

- ஒரு போராளியின் யுத்தம் காஃபிரான விரோதியுடன் உள்ளது. /
- ஒரு பெண்ணின் யுத்தம் மஹ்ரமல்லாத உறவுக்காரர்களுடன் பேணுதலாக இருப்பதில் உள்ளது.
- எதிரி ஒரு போராளியின் மீது குண்டுகளை வீசுவான்./
- அந்நிய ஆண்கள் ஒரு பெண் மீது காமப் பார்வை என்ற அம்பை எறிவார்கள்.
- விரோதி ஒரு போராளியின் நாட்டை கைப்பற்ற எண்ணுவான்./
- அந்நிய ஆண் ஒரு பெண்ணுடைய உடலை அபகரிக்க ஆசைப்படுவான்.
- விரோதி ஒரு போராளியின் நாட்டுடைய வளங்களில் பயன்பெற விரும்புவான்./
- ஒரு அந்நிய ஆண் பெண்ணுடைய உடலின் சுகத்தை ஆசைப்படுவான்.
- ஒரு போராளி விரோதியை நாட்டின் எல்லைகளை விட்டும் தூரத்த எண்ணுவார்./
- ஒரு பெண் தன்னைத் தான் அந்நிய ஆணின் தொடர்பை விட்டும் விலக்கி வைக்க ஆசைப்பட வேண்டும்.
- போராளி விரோதியை தன் நாட்டில் ஒரு ஜான் கூட நுழைய அனுமதிக்க மாட்டார்./
- ஒரு பெண் அன்னிய ஆணுடைய ஒரு விரல் கூட தன் மீது பட அனுமதிக்க மாட்டாள்.

- ஒரு போராளி விரோதியை எக்காலத்திலும் நம்ப மாட்டார்./
- ஒரு பெண் அன்னிய ஆணை எப்போதும் நம்ப மாட்டாள்.
- ஒரு போராளி பள்ளத்தில் பதுங்கி தன்னை தற்காத்துக் கொள்வார்./
- ஒரு பெண் வீட்டுடைய நான்கு சுவர்களுக்குள் இருந்து தன்னை பாதுகாத்துக் கொள்வாள்.
- ஒரு போராளி எதிரி தன்னை பார்த்து விட்டால் உயிருக்கு ஆபத்து என்று எண்ணுவார்./
- ஒரு பெண் அந்நிய ஆண் என்னை பார்த்து விட்டால் என் மானம் பறிபோகும் அபாயம் உள்ளது என்று கருதுவாள்.
- விரோதி ஒரு போராளியுடைய நாட்டை கொள்ளை அடித்துச் செல்வான்./
- அந்நிய ஆண் ஒரு பெண்ணின் கற்பு மானத்தை கலங்கப்படுத்தி விடுவான்.
- ஒரு போராளி விரோதியை தூர விரட்டுவதின் மூலம் தான் சிறந்த வீரன் என்ற அந்தஸ்தைப் பெறுவார்./
- ஒரு பெண் அந்நிய ஆணை தூர விலக்கி வைப்பதன் மூலம் முஜாஹிதா என்ற பட்டத்தை பெறுவாள்.
- ஒரு போராளி எதிரிக்கு தெரியாமல் மறைவாக தன் திட்டங்களை தீட்டுவார்./
- ஒரு பெண் அந்நிய ஆணின் பார்வைக்கு படாமல் தன் பணியை செய்வாள்.

- போராளி விரோதியின் தாக்குதலில் இருந்து தன்னை தற்காத்துக் கொள்ள கவசம் அணிந்து கொள்வார்./
- ஒரு பெண் அன்னிய ஆணுடைய பார்வையில் இருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ள பர்தா அணிந்து கொள்வாள்.
- போராளிக்கு எதிரியின் முன்பாக நிலைத்து நிற்பதில் வெற்றி கிடைக்கிறது./
- ஒரு பெண்ணிற்கு அன்னிய ஆணோடு தொடர்புடைய அனைத்து விஷயங்களிலும் பேணுதலாக இருப்பதில் நிலைத்திருக்கும் போது வெற்றி கிடைக்கிறது.
- ஒரு விரோதி போராளியுடன் பேச்சு வார்த்தை நடத்துவதை தன்னுடைய தந்திரத்தில் உள்ளதாகக் கருதுவார்./
- அந்நிய ஆண் ஒரு பெண்ணோடு பேசுவதின் மூலம் அவளை தன் வலையில் சிக்க வைக்க எண்ணுவான்.
- ஒரு விரோதி போராளியுடைய நாட்டிற்குள் தகவல் சேகரிக்க ஒற்றர்களை அனுப்புவான்./
- அந்நிய ஆண் ஒரு பெண்ணின் பால் நபர்களைத் தூதாகவோ அல்லது செல்போனில் குறுந்தகவல் களையோ அனுப்புவான்.
- விரோதி போராளியின் வழியில் பொறிகளைப் பரப்பி வைத்து வெற்றி பெற எண்ணுவான்./
- அந்நிய ஆண் ஒரு பெண்ணிற்கு அன்பளிப்புகளை வழங்கி நோக்கத்தில் வெற்றி பெற எண்ணுவான்.

- ஒரு போராளிக்கு இரவு பகலாக எல்லையை பாதுகாப்பதில் கூலி கிடைக்கிறது. /

- ஒரு பெண் இரவு பகலாக அந்நிய ஆணிடத்திலிருந்து பக்குவமாக விலகி இருப்பதற்கு கூலி இருக்கிறது.

- ஒரு போராளி தன் மிடுக்கான நடையின் மூலம் தன்னுடைய பலவீனம் தெரியாதவாறு நடந்து கொள்வார்./

- ஒரு பெண் பர்தாவின் மூலம் அந்நிய ஆண் தன் அழகை அறிந்து கொள்ளாமல் பார்த்துக் கொள்வாள்.

- ஒரு போராளிக்கு அவனுடைய மனம் என்ற உள்விரோதி ஆயுதங்களை கீழே போடுவதற்கு நிர்பந்திப்பான்./

- ஒரு பெண்ணை அவளுடைய தீய ஆன்மா அந்நிய ஆணிடம் மிருதுவாக நடந்து கொள்ளும்படி வற்புறுத்தும்.

- ஒரு போராளிக்கு போர் என்பது அல்லாஹ்வுடைய நெருக்கத்தை வழங்கும்./

- ஒரு பெண்ணிற்கு கற்பொழுக்கம் என்பது அல்லாஹ்வுடைய நெருக்கத்தை வழங்கும்.

- போராளிக்கு விரோதியிடத்திலிருந்து அபாயம் ஏற்பட்டால் அவனுடைய முஃமினான நண்பன் மூலமாக உதவி கிடைக்கும்./

- பெண்ணிற்கு மஹ்ரமல்லாத ஆண்களின் தரப்பிலிருந்து அபாயம் ஏற்பட்டால் அவளுடைய மஹ்ரமான ஆண்களின் மூலம் உதவி கிடைக்கும்.

- போராளி எதிரியுடைய தாக்குதலுக்கு வலுவான பதில் தாக்குதல் தொடுக்க வேண்டும்./
- அந்நிய ஆணின் பேச்சுக்கு வாயடைக்கும் பதிலை உடனுக்குடன் ஒரு பெண் கூறிவிட வேண்டும்.
- போராளிக்கு தன்னுடைய நாட்டை பாதுகாப்பதில் ஆர்வம் இருக்கும்./
- பெண்ணிற்கு தன்னுடைய கற்பை பாதுகாப்பதில் பேரின்பம் இருக்கும்.
- போராளியின் பிரார்த்தனைகள் அல்லாஹ்விடம் அங்கீகரிக்கப்படுகின்றன./
- கற்பொழுக்கமுள்ள பெண்ணின் பிரார்த்தனைகள் அல்லாஹ்விடத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.
- போராளிக்கு உள்நாட்டு எதிரியின் விஷயத்தில் அதிக அபாயம் இருக்கும்./
- பெண்ணிற்கு உறவினரான அந்நிய ஆண்கள் விஷயத்தில் அதிக ஆபத்து இருக்கும்.
- போராளி நாட்டைப் பாதுகாப்பதற்காக உயிர் துறந்தால் தியாகியாவார்./
- ஒரு பெண் தன் கற்பைப் பாதுகாப்பதற்காக மரணித்தால் தியாகியாவாள்.
- போராளி தன் வெற்றிக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்ய வேண்டும்./
- பெண் தன்னுடைய கற்பு, மானத்தைப் பாதுகாக்க அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

# இச்சையை கட்டுப்படுத்துவது தொடர்பான வினாத்தாள்

கீழேவுள்ள அனைத்து கேள்விகளுக்கும் பதிலளிப்பது கட்டாயமாகும்.இதற்கு நேரெதிரில் கூறப்பட்ட ஏ, அல்லது பி என்ற விடைகளில் சரியானதைக் குறிப்பிடவும்.

[ஏ]. [பி]

1. நீங்கள் அந்நியர்களை காமப் பார்வையால் பார்க்கிறீர்களா? [ ], [ ]
2. நீங்கள் அந்நியர்களான சிச்சா மகன்களிடத்தில் பர்தாவை பேண முயற்சி செய்கிறீர்களா? [ ], [ ]
3. நீங்கள் நண்பர்களுடன் ஆபாசமான கேலிப் பரிகாசங்களில் ஈடுபடுகிறீர்களா? [ ], [ ]
4. நீங்கள் தொலைக்காட்சியில் செய்திகள், மற்றும் நாடகங்களைப் பார்க்கிறீர்களா? [ ], [ ]
5. நீங்கள் காதல் காவியங்களை, அல்லது மூன்று பெண்கள், மூன்று கதைகள் போன்ற ஆபாசக் கதைப் புத்தகங்களைப் படிக்கிறீர்களா? [ ], [ ]
6. நீங்கள் அழகான ஆண் அல்லது அழகான பெண்ணுடன் மறைமுகமாக காதல் வயப்பட்டுள்ளீர்களா? [ ], [ ]
7. உங்களுக்கு பாடல்கள் மேலும் பாப் இசைகள் விருப்பமாக உள்ளதா? [ ], [ ]
8. இன்டர்நெட்டில் சேட்டிங் செய்வது மற்றும் ஆபாச புகைப்படங்களை பார்க்கிறீர்களா? [ ], [ ]

9. நீங்கள் தொலைபேசியில் மஹ்ரமல்லாதவர்களுடன் அருவருக்கத்தக்க விஷயங்களை பேசுகிறீர்களா? [ ], [ ]

10. நீங்கள் மார்க்கம் அனுமதிக்காத வழிகளில் இச்சையைப் பூர்த்தி செய்கிறீர்களா? [ ], [ ]

**குறிப்பு:** ஒவ்வொரு கேள்விக்கான பதிலில் பத்து மதிப்பெண்கள் கொடுத்து மொத்தத்தை கூட்டிக் கொள்ளவும்.

- பி என்ற எண்ணில் 50 மதிப்பெண்களை விட கூடுதலாக இருந்தால் நீங்கள் தோல்வியுற்றீர்கள் என்று அர்த்தம்.

  உடனடியாக அல்லாஹ்விடத்தில் தவ்பாவின் மூலமாக மறுமுறை தேர்வுக்கு தயாராக வேண்டும்.

- ஏ என்ற எண்ணில் 50 மதிப்பெண்களை விட கூடுதலாக இருந்தால் நீங்கள் வெற்றி பெற்று விட்டீர்கள் என்று அர்த்தம்.

  தவ்பா மேலும் மன்னிப்புக் கேட்பதின் மூலம் உங்களுடைய தரத்தை இன்னும் மேம்படுத்திக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

- ஒரு கால் ஏ என்ற எண்ணில் 80 மதிப்பெண்களை விட கூடுதலாக எடுத்திருந்தால் நீங்கள் முதல் தகுதியில் வெற்றி பெற்றுள்ளீர் என்று அர்த்தம்.

  இன்னும் சற்று முயற்சியைக் கூட்டி உயர்நிலை அடைய பாடுபட வேண்டும்.

- ஏ என்ற எண்ணில் 100 மதிப்பெண்கள் பெற்று இருந்தால் நீங்கள் முதல் தகுதி அடைந்துள்ளீர்கள் என்று அர்த்தம். உங்களுக்கு வாழ்த்துக்கள்.

அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தி நம்மோடு தொடர்பிலேயே இருக்கவும். நாம் உங்களுக்கு எல்லா வகையான இனிப்பு பண்டங்களை அல்லது, ஐஸ்கிரீம் போன்ற விருப்பமானதை உங்களுக்கு நாம் புகட்டுவோம்.

மேலதிகமாக நாம் உங்களிடம் வைக்கக்கூடிய கோரிக்கை பலவீனமான இந்த அடியானுடைய மன்னிப்பிற்காக தங்கள் துவா செய்யுங்கள்.அல்லாஹ் பரிசுத்தமான நபர் தரப்பிலிருந்து துஆவிற்காக உயர்த்தப்பட்ட கையை வெறுங்கையாக அனுப்ப மாட்டான் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். அல்லாஹ் நம் அனைவரையும் பொருந்திக் கொள்வானாக.ஆமீன் !.